Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

WESTERN UNION® பணப் பரிமாற்றம்

மூலம் உலகின் எப்பாகத்தில் இருந்தும் பணத்தை விரைவாக பெற்றுக்கொள்ள நல்லூரில்...


சந்தியா மல்ரி கோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 07 (26.07.2004) திங்கட்கிழமை இதழ்:297



கொல்லப்பட்ட கருணாவின் சகாக்கள்



அவர்கள் தங்கியிருந்த வீடு



விசாரணை நடத்தும் கண்காணிப்புப் பிரதிநிதி

# கருணாவின் முக்கிய சகாக்கள் எண்மர்

# கொழும்பின் புறநகரில் சுட்டுக்கொலை!

## கூட இருந்தவர்களே சுட்டுவிட்டு புலிகளிடம் சென்று சரணடைந்தனர்



(கொழும்பு)

**கொழும்பு நகரின் புறநகர்ப் பகுதியான கொட்டாவ – அத்துருகிரிய என்ற இடத்தில் – இரகசிய மறைவிடம் ஒன்றில் வைத்து கருணா அணியைச் சேர்ந்த ஏழு பேர் உட்பட எட்டுப் பேர் நேற்று அதிகாலை நித்திரைப் பாயில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.**

**கருணா குழுவில் இருந்த அதிருப்தியாளர்கள் சிலரே தமது சகாக்களை சுட்டுக்கொன்றுவிட்டு புலிகளிடம் சரணடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**நாடெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது –**

கொட்டாவ - மாலபே வீதியிலுள்ள அத்துருகிரிய பகுதியில் கிறிஸ்ரல் ரெரஸ் பகுதியில் ஒதுக்குப்புறமாக இருந்த வீடொன்றில் வைத்து நேற்று அதிகாலை சுமார் 3 மணியளவில் கருணா குழுவைச் சேர்ந்த ஏழுபேர் உட்பட எட்டுப் பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நித்திரையில் இருந்தபோதே - இவர்கள் எட்டுப்பேரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். வீட்டின் மேல்மாடியில் உள்ள ஒரு அறையில் நால்வரும் இன்னொரு அறையில் இருவரும் மேலும் ஒருவர் அறைக்கு முன்பாகவும் விறாந்தையில் ஒருவருமாக இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் பெரியளவில

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை சூட்டுச் சம்பவம் பாதிக்காது!

### உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

அத்துருகிரிய பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தினால் சமாதான முயற்சிகள் குழப்பமடைய வாய்ப்பில்லையென உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தக் கொலைச் சம்பவம் பற்றிய முழுமையான விபரங்கள் கிடைக்கும் வரை இதுதொடர்பாக எதுவும் கூறிவிடமுடியாது. எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், கருணா குழுவினருக்குமான தனிப்பட்ட குரோதமே இந்தச் சம்பவத்திற்குக் காரணமாக இருக்கலாம் எனத் தெரியவருகிறது.

இந்தச் சூட்டுச்சம்பவத்தால் அரசாங்கத்துக்கும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகம் எங்கும் துக்கதினம் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

1983 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு சிங்களக் காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு செயற்பாட்டை நினைவுகூரும் கறுப்பு யூலை தினம் நேற்று யாழ் மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், தேனீர் சாலைகள், வாகனம் திருத்தும் இடங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

1983 ஆம் ஆண்டு இடம் பெற்ற கறுப்பு யூலை நாளை அனுஷ்டிக்கும் முகமாக வீதிகளின் குறுக்கேயும் தமது கடைகள், தனியார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக்கொல்லப்பட்ட தம்மிக என்பவர் இராணுவ புலனாய்வு அதிகாரியா?

(கொழும்பு)

கொட்டாவ - அத்துருகிரிய பகுதியில் கருணா குழுவைச் சேர்ந்த 7 பேருடன் சுட்டுக்கொல்லப்பட்ட 8 ஆவது நபரான தம்மிக என்பவர் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான செய்திகள் வெளியாகியுள்ளன.

இணையத்தளங்களில் - கருணா அணியைச் சேர்ந்த 7 பேருடன், இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்தன.

ஆயினும், இந்தச் செய்தியை இராணுவத்தரப்பு மறுத்துள்ளபோதும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவிலிருந்து அதிருப்தியுற்றோரே சகாக்களைச் சுட்டுவிட்டு புலிகளிடம் சரண்!

(மட்டக்களப்பு)

கருணா குழுவிலிருந்து அதிருப்தியுற்ற சிலரே கொட்டாவ பகுதியில் தமது சகாக்களைச் சுட்டுக் கொன்று விட்டு - நேற்றுக்காலை அம்பாறையில் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்ததாக, தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறையினர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கருணா பிரிவிலிருந்து அதிருப்தியுற்ற சிலர் தமது சகாக்களைக் கொன்றுவிட்டு, இன்று காலை அம்பாறையில் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

### அரசியற்துறை அறிக்கை

தாம் கருணா பிரிவினருடன் யூலை 24 வரை இருந்ததாகக் கூறும் இவர்கள், தமக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டின் காரணமாக, நேற்று அதிகாலை 1 மணிக்கு கருணா அணியைச் சேர்ந்த 7 முக்கிய நபர்களை சுட்டுக்கொன்றதாகத் தெரிவித்தனர்.

குகனேசன், கஸ்ரோ, கேசவன், ரூபன், அற்பரன், விக்கி மற்றும் விமல்காந் ஆகியோரே கொல்லப்பட்டவராவர்.

கொல்லப்பட்டவர்களுள் ஒருவரான குகனேசன்- கருணாவுக்கு அடுத்த நிலையில் இருந்ததுடன், குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டு யூன் மாதம் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் இரகசியமாக விடுதலைசெய்யப்பட்ட 14 பேரில் ஒருவராவார்.

தப்பி வந்தவர்களின் கருத்துப்படி, இந்தச் சம்பவமானது கொழும்பு புறநகர்ப் பகுதியான கொட்டாவ என்ற இடத்தில் இராணுவத்தினரின் இரகசிய ஏற்பாட்டில் இவர்கள் இருந்தபோதே இடம்பெற்றுள்ளது. எனவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## ஹெல்கிசன் நேற்று மாலை கொழும்பை வந்தடைந்தார்!

### இன்று வன்னியில் புலிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக - இரு தரப்புகளுடனும் கலந்துரையாடுவதற்காக, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நேற்று மாலை கொழும்பை வந்தடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த விதார் ஹெல்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...


எங்கள் மண்ணில்
தங்கி நிற்போம்
உப்பு உற்பத்தி நிறுவனம்
THE ORGANIZATION FOR PRODUCTION OF SALT
யுனிசெப் நிதி உதவியுடன் ரெக் நிறுவனத்தால்
வடிவமைக்கப்பட்ட அயடீன் கலந்த உப்பு உற்பத்தி நிறுவனம்
நாளை (27.07.2004) காலை 11.00 மணியளவில்
புதுப் பொலிவுடன் கோலாகலமாக
திறந்துவைக்கப்படுகிறது
WASHED IODISED CRYSTAL SALT
ஆனையிறவு கறி உப்பு
ELEPHANT PASS CURRY SALT
Elephant Pass Salt Tern
A9 Road,
Elephant Pass.
KEEP IN COOL AND DRY PLACE, UES WITHOUT WASHING.
Rs: 15/=
1kg
unicef
உப்பு உற்பத்தி நிறுவனம், A9 சாலை ஆனையிறவு.

# செப்ரெம்பருக்குள் பெரும்பான்மையை நிரூபிக்காவிட்டால் நாடாளுமன்றத்தை மூடிவிட்டு மாற்றுவழியை நாடுவதற்கு அரசாங்கம் திட்டம்

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் - நாடாளுமன்றில் பெரும்பான்மையை, தற்போதைய அரசு பெறமுடியாமறபோனால் நாடாளுமன்றை மூடிவிட்டு மாற்றுச்செயற்பாட்டின் மூலம் அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு திட்டம் தீட்டியிருப்பதாக அரசியல் தகவல்கள் தெரிவிப்பதாக, நேற்று வெளிவந்த 'இருதின' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றை மூடிவிட்டு அரசாங்கத்தை நடத்திச்செல்லும் இந்தத் திட்டத்திற்கு, 'பிளான் எயிற்றீன்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'பிளான் எயிற்றீன்' என்ற இந்தத் திட்டம் 2002 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியால் முதன்முதல் செயற்படுத்தப்பட்டது. இது அப்போதைய ஐக்கிய தேசிய முன்னணியின் அரசைக் கவிழ்ப்பதற்கே பயன்படுத்தப்பட்டது. தற்போது இரண்டாவது நடவடிக்கையாக நாடாளுமன்றை மூடிவிட்டு, அரசாங்கத்தை நடத்துவதற்கு இது தயாரிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையான செய்தித் தகவல்களின்படி, நாடாளுமன்றை மூடிய பின்னர் ஜனாதிபதி அரசியலமைப்புச் சபையொன்றை நிறுவுவதற்குத தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பின் அரசியலமைப்புச் சபையின் தலைமையகமாக கொழும்பில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் இருக்கும்.

இதன்படி, அரசின் தீர்மானங்களை எடுக்கும் தலைமையகமாகவும் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபமே திகழும்.

நாடாளுமன்றத்தை மூடிவிடுவதற்கு முன்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய மற்றும் முஸ்லிம் காங்கிரஸுடன் கலந்துரையாடி, அரசில் அவர்களையும் இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டத்தைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்தக் கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால், அடுத்த நடவடிக்கையாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேசிய அரசு தொடர்பாக அழைப்பு விடுவது இந்தத் திட்டத்தின் அடுத்த நடவடிக்கையாகும்.

அதுவும் தோல்வியடைந்தால், சபாநாயகருக்கும், நாடாளுமன்றத்திற்கும் எதிராக ஜே.வி.பியினர் தலைமையில் நாடு முழுவதும் பரந்தளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி மக்கள் கருத்தினைக் கட்டியெழுப்பி, அதன் பின்னர் ஜனாதிபதியின் அதிகாரத்தினைப் பாவித்து, நாடாளுமன்றத்தை மூடிவிடுவதற்குத் தேவையானசூழலை ஏற்படுத்தவது, இந்தத் திட்டத்தின் இறுதி நடவடிக்கையென அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## ரட்ணசிறி விக்கிரமநாயக்க மன்னார், வவுனியா விஜயம்

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் முன்னாள் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க - வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அவர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்துவதுடன், ஓமந்தைக்கும் விஜயம் செய்யவுள்ளதாக வன்னி மாவட்ட இராணுவ சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அமைச்சரொருவர் - வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

## டக்ளஸை கொல்வதற்கு 10 புலிகள் வந்துள்ளனராம்!

### சிங்களப் பத்திரிகை தகவல்

புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்த 10பேர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்து கொழும்பிற்கு வந்துள்ளதாக - திவயின நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை திடீர்த்தாக்குதல் மூலம் கொலைசெய்வதற்காக விசேட பயிற்சிபெற்ற 10 விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கடந்தவாரம் கொழும்புக்கு வந்துள்ளதாக இராணுவ உளவுப்பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

அவர்கள் இரு குழுக்களாக பிரிந்து கொழும்பின் முக்கிய பகுதிகளில் நடமாடித்திரிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த காலப்பகுதியில் கொழும்பிற்குள் ஊடுருவியுள்ள புலிகளின் பிஸ்டல் குழுவினரும், கரும்புலிகளும் சதாரண விடுதலைப்புலி உறுப்பினர்களைவிட விசேடபயிற்சி பெற்றவர்கள் என்றும் -

புலிகளால் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உட்பட்ட பலரைக் கொலை செய்யும் நோக்கிலேயே இவர்கள் கொழும்புக்கு வந்துள்ளதாகவும், இவர்களது முக்கிய இலக்கு டக்ளஸ் தேவானந்தா எனவும் இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பிஸ்டல் குழுவினர் மற்றும் கரும்புலிகள் பற்றிய தகவல்கள் கிடைத்திருந்தாலும், தற்போதையசூழலின் சட்ட நிலைவரங்களைக்கொண்டு அவர்களைக் கைதுசெய்ய முடியாது உள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (தே)

## புரிந்துணர்வு உடன்பாட்டை கீழ் மட்டத்தினர் மதித்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை

### வன்னி மாவட்ட தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசினதும், விடுதலைப் புலிகளினதும் உயர்மட்டத் தலைவர்கள் செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை, கீழ் மட்டத்திலுள்ள இருதரப்பினரும் சிறப்பான முறையில் கடைப்பிடித்தால் எந்தப் பிரச்சினைகளும் ஏறபடமாட்டாது என்று, வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய தெரிவித்தார்.

வன்னி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

போர்நிறுத்த உடன்பாட்டையடுத்து வவுனியாவில் 1414 பொலிஸார்கள் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளனர்.

இதனால், சிவில் நிர்வாகத்தை நடத்த முடியாத கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது.

சிவில் நிர்வாகத்தை நடத்த இராணுவத்தினரை ஈடுபடுத்த முடியாது.

இராணுவத்தினருக்கு அச்சுறுத்தல் இல்லாத உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களைக் குடியேற்ற அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வெடி பொருட்களுடன் இருவர் திருமலையில் கைது

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்வண்டி ஒன்றை கந்தளாயில் வைத்து பொலிஸார் சோதனை நடத்தினர். பஸ்வண்டியில் பயணம் செய்த இரண்டு பயணிகளிடம் இருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சோதனையை அடுத்து கிண்ணியா வாசிகளான இரண்டு பேரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

இந்த பஸ் வண்டி தம்பலகாமத்தைச் சென்றடைந்த வேளை பொலிஸார் சோதனையிட்டபோதே அநாதரவான நிலையில் பொதி ஒன்றில் 50 ஜெலிக்நைட் திரிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுவதாகவும், கைதான சந்தேக நபர்கள் இருவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கைக்கு ஆயுத விநியோகம்

# இந்தியாவுடன் செய்துள்ள ஒப்பந்தத்தால் அமெரிக்கா- பாகிஸ்தான் போட்டி!

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் - இலங்கைக்கு யுத்த உதவிகளை வழங்குவது தொடர்பாக, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கத் தரப்புக்களுக்கும், இந்தியாவுக்குமிடையே கடும் மோதல் உருவாகியுள்ளதாக 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' தெரிவித்துள்ளது.

இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் இந்தியாசென்று இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இறுதி முடிவுகள் எடுத்ததன் பின்னர், ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை இந்தச்செய்தியினை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்துள்ள 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை-

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் இந்தியாவிடமிருந்து பெருமளவான யுத்த தளபாடங்களைப் பெற்றுக்கொள்வதாகும்.

1987ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி அரசின் தீர்மானப்படி, இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பிப்பெற்றுக்கொண்ட விரும்பத்தகாத நிகழ்வுகளால், மீண்டும் ஒருமுறை இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதில்லை என்பது இந்திய அரசின் நிலைப்பாடாகும்.

ஆனால், அன்றைய ராஜீவ் காந்தி அரசின் முன்னாள் அரசியல் நிர்வாக அதிகாரிகள் பலர் தற்போதைய இந்திய அரசாங்கத்தில் அதிகாரிகளாக இருப்பதோடு, அந்த அரசின் ஆட்சிக்காலத்தில் இருந்த நட்வர்சிங் இன்று வெளிவிவகார அமைச்சராக இருப்பதோடு, அன்று இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என்.டிக்ஷிற் பாதுகாப்பு ஆலோசகராகவும நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அரசு இலங்கை நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதோடு, அந்த நடவடிக்கைகளில் முழுமையாகத் தலையிடுவதற்கு திட்டங்களை தயாரித்து வருகின்றது என இந்திய அரசின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கைக்குத் தேவையான யுத்தத் தளபாடங்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, பாகிஸ்தான் கடந்த நாட்களில் ஒரு கோடி அமெரிக்க டொலர்களை கடன் தொகையாக வழங்கி உள்ளதோடு, இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்காவும் இலங்கை மீது அதிக தலையீடுகளை மேற்கொண்டு வருகிறது. அமெரிக்காவின் உதவி விவகாரங்கள், பாரிய அழுத்தத்தினை ஏற்படுத்தும் திட்டத்தோடே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது போன்ற அழுத்தங்களுக்கு மத்தியில் வரலாற்றுத் தொடர்புகள் மற்றும் இனரீதியான காரணங்களிற்காக மாத்திரம் அல்ல - இலங்கைத் தீவில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கு இலங்கையுடன் நெருங்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், இந்தியா விரும்புவதாக அந்த அதிகாரி தெரிவித்ததாக ரைம்ஸ் ஒவ் இந்தியா தெரிவித்துள்ளது.

மேலும் இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பும் எந்த வித எண்ணமும் இல்லாதுவிடினும், இந்தியா எதிர்வரும் காலங்களில் இலங்கைக்கு யுத்த தளபாடங்களை வழங்குவதன் மூலம் உதவி செய்ய இந்தியா விரும்புவதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(தே)

## இப்போதைய அரசாங்கத்தை கவிழ்க்க இடமளியோம்!

### ஹெல உறுமய கூறுகிறது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எவருக்கும் இடமளிக்கமாட்டோமென ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மெத்தானந்த தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிற்கு ஆதரவு வழங்குவதாக ஹெல உறுமய ஆரம்பத்தில் எடுத்த நிலைப்பட்டில் மாற்றம் எதுவும் இல்லை. அரசாங்கத்துடன் ஹெல உறுமயவிற்கு எந்தவிதமோதலும் இல்லை.

அரசாங்கத்தைக் கவிழ்த்து மீண்டுமொரு தடவை பொதுத்தேர்தலுக்குச்சென்று பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்த ஹெல உறுமய தயாரில்லை. யாராவது குழுவினராக ஒன்றிணைந்து அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சித்தால் அதனை நிறுத்துவதற்கு ஹெல உறுமய தலையிடும். இதேவேளை, அரசாங்கம் நாடாளுமன்றில் கொண்டுவரவுள்ள சட்டமூலங்களுக்கு ஹெல உறுமய ஆதரவு வழங்குவதற்கு தயாரென அக்கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

அரசாங்கப் பிரதிநிதிகளுடன் ஹெல உறுமய உடன்பாடொன்றை ஏற்படுத்த கலந்துரையாடல் நடத்த வேண்டுமெனில், அதற்காக ஹெல உறுமய தயாரெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## தேசிய பிரச்சினைகளைத் தீர்க்க தென் பகுதியிலுள்ள அரசியல்வாதிகள் ஒரே நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்!

### பிரதமர் கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தெற்கிலுள்ள அனைத்து அரசியல்வாதிகளும் நிலைப்பாடு ஒன்றுக்கு வரவேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அனுராதபுரம் அபயகிரி விகாரையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் இரண்டரை வருடத்துக்கள் பூர்த்தி செய்யும் செயற்றிட்டத்தின் ஆரம்ப வைபத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது -

வடக்கு - கிழக்கைப் போன்றே, தெற்கிலுள்ள மக்களும் நாட்டில் எந்தவொரு பிரதேசத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கு தேவையான பின்னணியை ஏற்படுத்துவதற்கு அனைவரும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

இதற்குத் தற்போது அயல் நாடுகளின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.

நாட்டுமக்களுக்கு சமாதானத்தை ஏற்படுத்தி எந்தவித பயமும், சந்தேகமுமற்ற சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு, அனைவரினதும் ஒத்துழைப்புத் தேவைப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் 59 ஒட்டங்களால் இந்திய அணியைத் தோற்கடித்தது

## ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி - 2004



(கொழும்பு)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற பகல் - இரவு ஆட்டத்தில் பாகிஸ்தான் 59 ஓட்டங்களால் இந்திய அணியைத் தோற்கடித்தது.

பாகிஸ்தான் அணியின் இந்த வெற்றிக்கு அவ்வணி வீரர்களின் சிறந்த துடுப்பாட்டமே காரணமாகும்.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவ்வணிக்கு முதலாவது ஓவரே அதிர்ச்சியாக அமைந்தது.

பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இம்ரான் நசீர் ஒரு ஓட்டத்தைப் பெற்றிருக்கையில் இர்பான் பதானின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் யாசிர் ஹமீத்துடன் இணைந்தவர் சொகைப் மலிக். இவர் இந்திய பந்துவீச்சாளர்களின் பந்துகளைத் துவம்சம் செய்து பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.


பாகிஸ்தான் அணியின் இரண்டாவது விக்கெட் அந்த அணி 105 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யாசிர் ஹமீத் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் சொகைப் மலிக்குடன் அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக் இணைந்தார். இருவரும் பந்துகளை நாலாபுறமும் பறக்கச் செய்தனர். இந்த நிலையில் இன்ஸமாம் 34 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அணி 171 ஓட்டங்களில் தனது மூன்றாவது விக்கெட்டை இழந்தது.

இவ்வாறே அடுத்து வந்த வீரர்களும் சராசரியான ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக சொகைப் மலிக் 127 பந்துகளில் ஒரு சிக்ஸர், 18 பவுண்டரிகள் அடங்கலாக 143, யாசிர் ஹமீத் 31, இன்ஸமாம் 34, யூசுப் யுகானா 29, அப்துல் ரஸாக் 21 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் இந்தியப் பந்துவீச்சாளர்கள் 21 உதிரிகளையும் விட்டுக்கொடுத்தனர்

பந்துவீச்சில் இர்பான் பதான், டெண்டுல்கர் இருவரும் தலா 3,



கும்ளே, ஹர்பஜன்சிங் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 301 எடுத்தால் வெற்றி என்ற மிகப்பெரிய இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களை மட்டுமே எடுத்ததனால் பாகிஸ்தான் அணி 59 ஓட்டங்களால் வெற்றியடைந்தது.

இந்திய அணி சார்பாக டெண்டுல்கர் 78, கங்கூலி 39, யுவராஜ்சிங் 28, பதான் 38 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சபீர் அகமட், சொகைப் மலிக் இருவரும் தலா



இரண்டு, அக்தர், சமி மற்றும் அப்துல் ரஸாக் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டத்தின் நாயகனாக சொகைப் மலிக் தெரிவானார். இதேவேளை இந்தியா 241 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தாலும் அது போனஸ் புள்ளிகளைப் பெற்றுள்ளது.

## விளையாட்டு

# மூன்றாவது இடத்தை பிடித்தது உருகுவே!

COPA AMERICA PERU 2004

பெருவில் நடைபெற்றுவரும் கோபா அமெரிக்க கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் உருகுவே அணி வெற்றி பெற்றது.

அரையிறுதிப் போட்டிகளில் தோல்வியடைந்த உருகுவே அணியும், கொலம்பிய அணியும் - நேற்று முன்தினம் மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் மோதின.

வலுவான அணியான உருகுவே அணியுடன், தற்போதைய சம்பியனான கொலம்பிய அணி மோதும் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆட்டம் ஆரம்பித்த சற்று நேரத்தில் - 32 ஆவது நிமிடத்திலேயே உருகுவே அணி வீரர் பபியன் எஸ்ரோ யானொவ் முதலாவது கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார்.

முதலாவது பாதி ஆட்டத்தில் கொலம்பிய அணியால் பதில் கோல் எதுவும் போடமுடியாமல் இருந்தது. இதனால் இரண்டாவது பாதி ஆட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

விடாமல் போராடிய கொலம்பிய அணியின் சார்பில் 71 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்கப்பட்டது. அணிக்குக் கிடைத்த பனால்டி



வாய்ப்பைப் பயன்படுத்தி சேர்கியொ ஹெரேரா இந்த கோலை அடித்தார்.

கொலம்பிய அணிக்குக் கிடைத்த இன்னொரு பனால்டி வாய்ப்பை, அந்த அணி வீரர் வின்சென்ற் சன்செஸ் தவறவிட்டதால், உருகுவே அணி 2-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது. இதன்மூலம் உருகுவே அணி மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் பிரேசில் - ஆர்ஜென்ரீன அணிகள் மோதவுள்ளன.

# மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின்போது 223 ஓட்டங்கள் முன்னிலையில் இங்கிலாந்து



(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 416 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

முதல் இனிங்ஸில் 568 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த இங்கிலாந்து அணிக்கு எதிராக மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது நாள் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 4 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சந்தர்போல் 41 ஓட்டங்களுடனும், பிராவோ 30 ஓட்டங்களுடனும் நேற்றுமுன்தினம் மூன்றாவது நாள் ஆட்டத்தைத் தொடங்கினர்.

அணி 139 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது லாரா ஆட்டமிழந்த பின்னர் - சந்தர்போலும், பிராவோவும் இணைந்து அற்புதமான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தினர்.

இந்த ஜோடி 264 ஓட்டங்களை அணி பெற்ற நிலையில்தான் இங்கிலாந்து பந்துவீச்சாளர்களால் பிரிக்க முடிந்தது. பிராவோ 44 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த பின்னர் ஜேக்கப் களம் புகுந்து சந்தர்போலுடன் இணைந்து ஆடினார்.

ஜேக்கப் 32 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததையடுத்து பாங்ஸ் களமிறங்கினார். அவரும் 45 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து




சென்றார்.

அதேவேளை, சந்தர்போல் ஆட்டமிழக்காமல் எதிர்முனையில் நிலைத்துநின்று ஆடிக்கொண்டிருந்தார். இவருடன் பின்னர் இணைந்த பேஸ்ட் மற்றும் கொலின்ஸ் ஆகியோர் ஓட்டமெதையும் பெறாமலே ஆட்டமிழந்து சென்றனர்.

அடுத்து வந்த எட்வேட்டும் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால், மேற்கிந்தியத்தீவுகள் அணி 416 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சந்தர்போல் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இவர் 270 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன்



128 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இது இவரது 11 ஆவது டெஸ்ட் சதம் என்பது குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் பந்துவீசிய ஜைல்ஸ் 40.4 ஓவர்கள் பந்துவீசி 129 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பிளின்ரொப் 3 விக்கெட்டுக்களையும், ஹோகாட் 2 விக்கெட்டுக்களையும், ஜோன்ஸ் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதல் இனிங்ஸில் 152 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த இங்கிலாந்து அணி - நேற்றுமுன்தினம் இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்தது.

இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ட்ரஸ்கோதிக் மற்றும் ஸ்ரரஸ் ஆகியோர் - மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பந்துவீச்சாளர்களால் வீழ்த்தமுடியாமல் துடுப்பெடுத்தாடினர்.

22 ஓவர்களுடன் மூன்றாவது நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது, இங்கிலாந்து அணி 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ட்ரஸ்கோதிக் 34 ஓட்டங்களையும், ஸ்ரரஸ் 27 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 10 ஓட்டங்கள் கிடைத்தன.

மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 223 ஓட்டங்கள் முன்னிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## இன்னும் 18 நாட்களில்

நமது ஈழநாடு ஒலிம்பிக்4 ATHENS 2004


## வரலாறு காணாத மலிவு விற்பனை

COMMERCE STUDENTS' UNION UNIVERSITY OF JAFFNA

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

காலம் : 2004 ஜூலை 19 முதல் 29 வரை

நேரம் : தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)

இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

(சீ-2764)


# பெண் கைதிகளிடையே குத்துசண்டை போட்டி



தாய்லாந்தில் உள்ள சிறைகளில் ஏராளமான பெண்களும் இருக்கிறார்கள். சிறையில் பெண் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் - பெண் கைதிகளைப் பராமரிக்க பெண் ஊழியர்களை அதிகமாக நியமிக்கவேண்டியுள்ளது.

இந்த நிலையில், பெண் கைதிகளுக்கு சிறையிலேயே குத்துச்சண்டை மற்றும் பல்வேறு விளையாட்டுப் பயிற்சிகளை அளித்துவருகிறார்கள். அவர்களுக்கு குத்துச்சண்டைப் போட்டிகளை நடத்தி அவற்றைப் பார்க்க வெளியாட்களை அனுமதிக்கிறார்கள்.

இதனால் சிறை நிர்வாகத்திற்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கும் இது பயன்படுகிறதாம்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# வரலாற்று மாற்றங்களுக்கு வவுனியா மண் ஈடுகொடுக்கும்

## க.வே.பாலகுமாரன் கூறுகிறார்



(வவுனியா)

வவுனியா மண் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள வரலாற்று மாற்றங்களுக்கு ஈடு கொடுககப்போகும மண் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்ற 'தாய் மடியின் தாலாட்டு' ஒலிப்பாடற் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வரலாற்றுப் பெருமைமிக்க மண் வவுனியா மண். ஆனாலும். தற்போது வவுனியா மாவட்டம் வெவ்வேறு விதமான சமுதாயச் சீரழிவுகளில் சிக்கியிருப்பது வேதனை தரும் விடயமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முனனதாக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுபபாளர் ஞானவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். நிகழ்வில் வெளியீட்டு உரையினை தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்தினார்.

முதற்பிரதியை தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் வெளியிட்டு வைக்க மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் பெற்றுக்கொண்டார். கலைஞர்களுக்கு சோ.தங்கன் பரிசில்கள் வழங்கிக்கௌரவித்தார்.

# புலமைப் பரிசில் மாணவர்களுக்கு சனியன்று முன்னோடி பயிற்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் பொருட்டு உடுவில் கல்விக் கோட்டத்தினால் தொடர்ச்சியாக நடாத்தப் பட்டுவந்த பயிற்சிப் பரீட்சையின் 10 ஆவது பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 11.30 மணி வரை இணுவில் மத்திய கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி, ஏழாலை மகாவித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை ஆகிய ஆறு பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல மாணவர்களும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். தேசிய மட்டப் பரீட்சைக்கான சுட்டெண்களே இதற்கும் பயன்படுத்த வேண்டும் எனவும் -

30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் மண்டபத்தில் ஆசிரியர்கள் கடமைபுரியவேண்டும் எனவும், உடுவில் கோட்டக் கல்வி அதிகாரி செ.குபேரநாதன் அறிவித்துள்ளார். (101)

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்தவருடம் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதப பத்திர சாதாரணதர மாணவர்களுக்கான கணிதபாட முன்னோடிப் பரீட்சைகள் வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிமுதல் பரீட்சை நடைபெறும். இதில் 1 தொடக்கம் 20 அலகுகள் வரை வினாக்கள் பரீட்சிகசப்படும். ஒக்ரோபர் 16 ஆம் திகதி- 1 தொடக்கம் 25 அலகுகள் வரையும், நவம்பர் 6 ஆம் திகதி முழுப் பாடத்திட்டத்திற்குள்ளும் வினாக்கள் பரீட்சிக்கப்படும் என் வடக்கு-கிழக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (101)

# திட்டமிடற் சேவையாளருக்கு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படும். விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக - 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், நிறுவனங்கள், வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பெலவத்த, பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி ஆகும். (100)

# 'மலரின் கட்டுரை' வெளியீட்டு விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மலர் சின்னையாவின் தரம் 4, 5 மாணவர்களுக்கான கட்டுரைகள் அடங்கிய 'மலரின் கட்டுரை' வெளியீட்டு விழா நாளை மாலை 4.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் வெளியிட்டுரையை கல்வியியற்துறை விரிவுரையாளர் ரி.கலாமணியும், ஆய்வுரையை மனோன்மணி சண்முகதாஸூம், மதிப்பீட்டுரையை அதிபர் வே.ஞானகாந்தனும், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி தியாகலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : அ.யோன் பிளஸ்சியன்
முகவரி : செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு

பத்தாவது அகவையில்



பெயர் : பி.ஜெயந்தன்
முகவரி : 4 ம் வட்டாரம் எழுவைதீவு

# வர்த்தகர்களின் அசமந்தப் போக்கால் போக்குவரத்துக்குப் பெரும் சிரமம்!

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் நெல்லியடிச் சந்திக்கு அண்மித்த பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களின் கூரைகள் வீதியோரம் நோக்கி இருப்பதுடம், வியாபார நிலையங்களுக்கு முன்னால் மண்போட்டு உயர்த்தி அவ்விடத்தில் பொருட்களைப் பரப்பி விற்பனை செய்துவருகின்றனர். இந்த வீதியோரங்களின் இருமருங்கும் வாகனங்கள் நிறுத்தப் பட்டுவருகிறது.

இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதோடு, விபத்துக்களும் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் நிறைய இருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பிரதிநிதிகள் கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குறைபாடுகளை நீக்கி வீதிகளின் நிர்மாண அளவுகளை முறையாகக் கடைப்பிடித்து உதவுமாறு வர்த்தக நிலையங்களை பிரதேசசபையினர் கேட்டுள்ளனர். (13)

# நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான மாதாந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நெடுந்தீவின் முன்னேற்றம், அபிவிருத்தி தொடர்பாக சகல விடயங்களுகம் ஆராயப் படவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் ஏற்கனவே நெடுந்தீவுடன் தொடர்புடைய சகல திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை மாதாந்தம் கூட்டப்படும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் எதுவும் முற்றுமுழுதாக நடைமுறைப்படுத் தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டுவதனால் மக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

# நிகழ்ச்சித்திட்ட அமைப்பாளருக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

நிகழ்ச்சித்திட்ட அமைப்பாளர்/ முறைமைப் பகுப்பாளர்களைத் திறந்த போட்டிப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு, தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன் உள்நாட்டு விண்ணப்பங்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னரும், வெளிநாட்டு விண்ணப்பங்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதிக்கு இடையிலும் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தபால் உறையின் மேல் இடதுபக்கத்தில் 'நிகழ்ச்சித்திட்ட அமைப்பாளர்கள்/முறைமைப் பகுப்பாளர்கள் ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப்பரீட்சை' எனக் குறிப்பிட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும்படி ஜனாதிபதியின் செயலாளர் கேட்டுள்ளார். (100)

# மானிப்பாய் சமுர்த்தி வங்கியில் கடன்பெற விண்ணப்பிக்கலாம்!

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மானிப்பாய் சமுர்த்தி வங்கியூடாக சமுர்த்திப் பயனாளிகளுக்கு சுமார் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபா வரையிலான தொகை சுயதொழில் முயற்சிக் கடன்கள் வழங்கப்பட்டுவருகிறது.

இந்த வங்கியினூடாக இதுவரை சுமார் 70 பேருக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கடன்பெற்று சுயதொழிலை மேற்கொள்ள விரும்பும் சமுர்த்தி வங்கி வாடிக்கையாளர்கள், அந்தந்தப் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துக் கடன் பெறமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (44)

## முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபையினரால் முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் இலைக்கஞ்சி வழங்கப்படவுள்ளது.


எதிர்வரும் திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு யாழ்.மாநகர சபை சித்த மருத்துவ வைத்தியசாலையில் வைத்து யாழ்.மாநகர சபையினால் நடத்தப்பட்டுவரும் முன்பள்ளிச் சிறார்களுக்கே இலைக்கஞ்சி வழங்கப்படவுள்ளது.

அன்றையதினம் சிறார்களின் பெற்றோர்களும் அழைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுப்போட்டி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபையின் பகற் பராமரிப்ப நிலையச் சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பகற்பராமரிப்பு நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. சபைக்குரு ஆர்.யோன்செல்வம் தலைமையில் இடம்பெறும் இந்தப்போட்டியில், பிரதம விருந்தினராக எஸ்.எல்.சீ.சி.ஏ. இன் பணிப்பாளர் அசோக வீரசிங்க கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)







நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவன பயனாளிகளுக்கான விளையாட்டு விழா நடைபெற்றபோது, பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்றுக்கொண்ட வீராங்கனையை முதலாவது படத்திலும், ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற வீரரையும், போட்டியில் பங்குபற்றிய வீராங்கனைகளையும் படங்களில் காணலாம்.

தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் என்ற இயற்பெயர் கொண்ட முனியப்பதாசன் மாறுபட்ட சிந்தனைச் செழுமை கொண்ட அற்புதமான படைப்பாளி. அவர் மறைந்து பல ஆண்டுகளான நிலையிலும் அவரது 'படைப்புக்களின் ஆத்மா' வை இனங்காணுதல் என்பது இன்னமும் பிரமிப்பூட்டும் ஒன்றாகவே உள்ளது.

தமிழகத்து இலக்கிய முனிவர் மௌனி போல் முனியப்பதாசனும் புதிரான மனிதனாவார். அவர் படைப்புக்களும் அப்படியே. தமிழிலக்கிய உலகில் அழியாத் தனிமை கொண்ட தனது சிறுகதைகளால் ஓர் உயர்ந்த - எவராலும் இட்டுநிரப்பப்படாத இடத்தை வகிக்கும் அவரது அமர சிருஷ்டிகளில் ஒன்றை எமது வாசகர்களுக்காக இங்கு பிரசுரிக்கின்றோம்.

எழுத்துக்கும் வாழ்வுக்கும் ஓர் ஆன்மீக இணைப்பை ஏற்படுத்தி தமிழிலக்கிய பரப்பிற்கு ஒரு புதிய கொள்கையை உருவாக்க முயன்ற முனியப்பதாசனின் படைப்புக்களை தேடிப்படித்து சிந்தித்து ஆய்வு செய்தலென்பது ஒரு மாறுபட்ட இலக்கிய ஆன்மீக அனுபவமேயாகும்.





## பொக்கிசம்

# சத்தியத்தின் குரல்


## முனியப்பதாசன்

சத்தியத்தின் குரல் என் செவிப்புலனில் தெளிவாய் விழுகிறது. சிற்றாறு ஒன்று வெண்மணற் பரப்பின் மருங்கே படிந்து நிற்கும் வெள்ளிய கற்களிலே இதமாய்த் தன் சின்னஞ்சிறு அலைகளால் மோதுகிறபோது இதமாய்க் குலுங்கி எழும் ஒலி போலக் கேட்கிறது. அதனோடு ஒட்டி அந்த ஒலியின் இழுப்பில் தன்னிச்சையாய் இழுபட்டு அச்சத்தியத்தின் பூரணப்பொலிவோடு கிறங்கி அதுவே நானாய் நிற்க முடியத்தான் இல்லை.

கால வெள்ளத்தில் நீந்தி இந்த நூற்றாண்டுக்கும், நகர்ப்புறத்துக்கும் உரியதாய் விரவி நிற்கும் கயமைத் தனங்களும் சின்னத் தனங்களும் போட்டி பொறாமைகளும் என்னையும் பற்றிக் கொண்டுதான் நிற்கின்றன. காலை, மாலை என்கிற இயற்கையின் பரிசுத்தம் நிரம்பிய எல்லைக் கோடுகளுள் மறைந்தும் மறையாலும் தெரிகிற அக உணர்வைத் தொட்டு உலுப்புகிற இயற்கையின் தோற்றத் கிறக்கத்தில் சகலதையும் மறந்து நான் என்கிற தனித்துவமான உணர்வு கழன்றுபோகச் சத்தியத்துக்கே நிற்க முனைகிற போது எங்கிருந்தோ என் கயமைத தனங்கள் சொல்லிக கொள்ளாமல தலையை நீட்டுகின்றன. அவற்றின் முகிழ்வில் புனிதத்தன்மை கழன்றுபோய் வீதியில் இறங்குகிற போது அவனோ - அவளோ அப்போது தங்கள் புனிதமான அக உணர்வின் சத்தியத்தை மறந்துவிட்டு எதிர்ப்படுகிறார்கள். பிறகு? எது எதுவோ நடந்துவிடுகின்றன. நடப்பின் முடிவில் மனம் அவலமாய் பிளிறுகிறது. சத்தியத்தின் சுவடு கூடத் தெரிகிறதில்லை. அழத்தான் முடிகிறது. அழுது அழுது உயிர்க் கூட்டில் சத்தியத்தின் குரலை மீண்டும் ஏற்றுகிறபோது ஒரு கணம் ஒளி மயமாய்த் தெரிகிறது. செய்த தவறுகளுக்குரியவன் நானல்ல என்கிற இறுமாப்பு இருள்மயமாய் நிற்க, அவற்றின் இடையே சத்தியமாய் நிற்க முயலுகிறேன் என்கிற ஒளியின் பிரகாசத்தில் நான் மேலே மேலே மிதக்கிறேன்.

பிறகு, விடிந்து வீதியில் இறங்கினால் சத்தியம் நெகிழ்ந்து போய்விடுகிறது. கதோ உபநிஷத்தில் வருகிற நசிகேசனைப போலச் சத்தியத்தை நோக்கி சத்தியமாகவே சரிந்து இடறுப்பட்டு விழாமல் நடந்துபோகிறதென்பு மட்டும் இருக்குமானால் - நசிகேசன் எங்கே நான் எங்கே? திரும்புகிற இடமெல்லாம் புனித வேள்வியில் ஆத்மாவை மலர்விக்க முயன்று, ஆத்மீக அடி நாதமாய் அனைத்துலக மனிதனை நோக்கி ஞானிகள் பேசியும், பாடியும் மெய்ப்பித்து வந்த அனைத்துலக மனித காலம் எங்கே?

நெஞ்சு வரண்டு போகிறது. காரண ரீதியாய் தொட்டு விளக்கிக காட்டமுடியாத அக உணர்வுகளின் நம்பிக்கையில் புறவாழ்வின் சுகங்களைத் துறந்துவிட்டு, உலகமெல்லாம் தனது என்ற நின்ற அந்தத் துறவிகள் அவர்களது ஆத்ம போதனைகள் எல்லாம தெரியத்தான் தெரிகின்றன. கண் முன்னால் நான் தொட்டும், தடவியும், விழுந்தும், புரண்டும், மகிழ்ந்தும் போன யாழ்ப்பாண நகர்ப்புறத்து மண்ணும் தெரியத்தான் தெரிகிறது.



நானும் கூடப் புறவாழ்வின் சகல படிகளையும் தோற்றுவிட்டுத்தான் நிற்கிறேன். எதனாலோ எப்போதோ தோற்கப்பட்ட ஒரு தோல்வியின் வித்திலிருந்து வெடித்துக் கிளம்பிய அக உணர்வு ஒன்று வலிமையுடையதாகி, அதுவே நானாய் மாறிச் சத்தியத்தின் குரலுக்காய் என் செவிப்புலனை மலர வைத்துக் கொண்டுதான் நின்கின்றேன். இப்போது அந்தத் தோல்வியின் முடிவில் உள்ளத்தில் ஆழமாயப் பதிந்து போன வடுக்களின் நிழல்கூட இல்லை. சத்தியத்தின் நிழல்கள் தெரிகின்றன. எப்பொழுதோ எங்கிருந்தோ இன்னிசையாய்க் கேட்கும் அந்தக் குரலில் சகலதையுமே துறந்து சகலதுக்குமே அரசனாய் நிற்கலாம் என்கிற இறுமாப்பும் சுகமுமே நானாய், என்னுள் மலர்வித்து வளர்த்துக் கொண்ட உலகம். அந்த உலகத்தினுள்ளே சங்கீதமாய் இருக்கிறது. அந்த இன் ஒளி வெறும் தோற்றம் தான். அது தோற்றம்தான் என்கிற சங்கதியைப் பல தரம் இடறுப்பட்டுப் புரளுகிற போதுதான் உணர முடிகிறது.

புலன்களை மதுவுக்கு விற்றுவிட்டு மனித மணங்களோடு தொடர்பு கொள்கிற போது சத்திய இருதயத்தின் இன்னொலி மாறி அவலக் குரலாய் எழுந்துவிடுகிறது. பிறகு உலகத்தின் பரிகாசமான சிரிப்பு. அந்தச் சிரிப்பின் ஒலி, என்னுள் புகுந்து சத்திய உலகத்தின் கதவுகளில் மோதி உடைந்து வெறுமனே படிகிறது. சத்திய உலகத்தின் இருதயத்தில் உள் புகுந்து நின்ற ஜீவனைத் தொடுகிற குரல் அந்த உலகத்து மனிதர்களின் பரிகாசச் சிரிப்பில் இல்லை. மோதிய ஒலி முற்றும் முழுதான வேகத்தோடு புறப்பட்டு வெளியே உலவுகிற போது, அது, அந்த ஒலி சிரித்தவனையே சிரிக்கிறது.

சத்தியம் என்பது அடி மனதின் அடியில் கிளர்ந்தெழும் புனித உணர்வுகள். அவை வெளியுலகத்தில் குழந்தைத் தனமாயும், வேடிக்கையாகவும் வெளியே புறப்படுகிறது. அந்த உணர்வுகள் உருவாக்கும் செயல்கள் சத்தியத்தின் செயல்களாய் நின்றாலும் சத்தியத்தின் குரலைக் கேட்கிறவன் செய்கிற செயல்களல்ல. அது இந்த மண்ணில் நிற்கிற மனிதர்கள் காணுகிறதாயும், கற்பிக்கிறதாயும், கேட்கிறதாயும் சொல்லப்படுகிற தவறுகள்.

நெடு நேரமாய் என்னையே என் மனம் அளந்து பார்க்கிறது. அந்தப் பார்வையில் ஆண்டுக்கணக்காய் என்னுள் சமைந்து நின்ற ஒரு உலகத்தின் மௌனமான ஒலிகள் தேங்கிக் கேட்கின்றன. சமாதானமாக அன்று, நித்தியமான சத்தியத்தை நோக்கி நடபயில்கிற போது எதனாலோ இடறுபாடு நிகழ்ச்சிகள் ஒலிமயமாய்க் கூடிச் சிரிக்கின்றன.

நான் சத்தியமில்லை. அது எனக்குத் தெரியத்தான் தெரிகிறது. என்றோ ஒரு நாள் சத்தியமாகிவிடுவேன் என்ற நம்பிக்கையில் சத்தியத்தின் உணர்வில் மட்டும் இழுபட்டு நிற்கிற மனிதன் நான். வெறுமனே மனிதன். கோடி கோடியாய்ப பிரபஞ்சத் தொட்டிலில் தம் பெயர்களைப் பதிக்காமல் கவிதை எழுதிக் கொண்டேயிருக்கும் உயிர்த் தொகுதிகளைக் கண்டும், அவை தரும் பேரின்பச் சுகத்தில் கிறங்கி நின்றும், அவற்றுக்கு உருவம் கொடுத்தும் அவற்றால் புகழ் சம்பாதித்துக்கொள்ள முனைகிற வெறும் மனிதன். ஆனாலும், சத்தியத்தின் குரலை, இடையீடற்ற அந்தக் குரலை வெறும் நம்பிக்கையின் பேரிலாவது கேட்டுக் கொண்டிருக்கிற மனிதன்.

அந்த வெறும் மனிதனான என்னுள் சத்தியமான ஓர் உருவத்தின் குரலையும் சத்தியமான ஓர் உருவத்தையும் கண்முன் கண்டுவிட வேண்டும் என்று என் நெஞ்சு துடிதுடிக்கிறது. நமது உபநிஷத்தின் ஏடுகளில் தெரிகிற சத்தியமான வார்த்தைகளையும், அந்த வார்த்தைகளின் உள்ளே சத்தியமாய் நிற்கிற இருதயங்களையும் இரவு பகலாய்ப் பல சந்தர்ப்பங்களில் நான் கண்டதுண்டு. அவை வெறுமனே உணர்வுகளும், உணர்வுகளும் பேசிக்கொள்கிற சக்திகள். அவற்றுக்கு இந்த உலகத்தில் எந்த மதிப்பும் இல்லை, என்கிற உண்மையும் எனக்குத் தெரியும். எங்கோ வெகுதூரத்துக்கப்பால் நிற்கிற மனிதனின வியாக்கியானம். வெறுமனே எழுந்து வெறுமனே தேய்ந்து விடத்தான் வேண்டியிருக்கிறது.

இந்தப் போதில் என்னுள் ஓர் உணர்வு முகிழ்கிறது. புதிதாய் முகில் கருநீலம் போர்க்கிறபோது, இடையே இடி நகை ஒலி செய்கிறபோது நடைபாதை தவிர்ந்த இருண்ட பிரதேசங்களில் வெடித்துக் கிளம்பும் காளான் போல அன்று. எல்லையற்ற கருநீலப் பரப்பில் சதா மாறி மாறி உருண்டும், புரண்டும் போகிற அலைபோன்ற உணர்வுதான். எப்படியோ அவற்றை ஆண்டும், அடக்கியும், துரத்தியும் விட்டுச் சத்தியத்தின் தடத்தில் கால் பரவி நிமிருகிற போது, நானே கார ணம் இல்லாமல், நானே என்னை இடறிவிட்டவை போக என்னுள் உள்ளான எதுவோ அவலமாய் புதுக் குரல் எழுப்புகிற அனுபவம்... சத்தியத்தின் தடத்தில் நடக்கிற எவன் செவிபுலனிலும் அந்த அனுபவத்தின் துன்ப மயமான ஒலி கேட்கத் தான் கேட்கிறது.

இப்போது அந்தக் குரல் புதிய உணர்வின் அலறல்.

பிரிபடாத மௌன சுகத்தில் தேங்கியபடியே சத்தியத்தின் தடத்தில் கால்பரவ முனைகிறவன் இதன் ஒலியைத் தாங்கிக்கொள்ள முடியாதுதான். பிரிபடாத அவனது அந்த மௌனத்தை வெட்டி வெறும் ஒலிகளின் ஓசையாய் நிரப்பி அந்த வெறும் ஓசையினுள் அவனை நிறுத்திவிட்டு வெகு தூரத்துக்கப்பால் தான்மட்டும் பிரிபடாத மௌனமும் பேச்சுமாய் சத்தியம் தன் அமுதமயமான இன் ஒலியைப் பிறப்பித்துக் கொண்டிருக்கும். செவிப்புலனில் பட்டும் படாமலும் நிற்கிற அதன் குரலில் எது எதுவோ இல்லாததும், பொல்லாததுமான குழப்பங்களாகி நிமிருகிற போது நெஞ்சின் அடிவாரத்தில் எங்கிருந்தோ இடையீடற்றுச் சங்கிலிருந்தும் வீறிட்டு வருகிறாற் போலப்படும். ஒலி எழுப்புகிறவனும் ஒலியும் பிரிபட்டு நின்று அது அதுவே தன் தன தடத்தில் சத்தியத்தின் ஒலியைத் தோய்த்து விடுகின்றன. எட்ட எட்டச் சத்தியத்தின் குரலுக்காய் ஓடுகிறவன் இரண்டு ஒலியும் ஒலி செய்கிறவனுமாய் மாறி அவையே இவையாய் இவையே அவையாய் மலர்ந்து விடுகின்றான்.

நான் பழைய மனிதன்.

வித்தை காட்டும் சத்தியத்தின் குரலுக்கு என் செவிகளை நிமிர்த்தியபடியே நெஞ்சில் ஊறும் உணர்வுகளின் தாளலயத்தையும் குழைத்துப் பிடித்து நிமிர்ந்து நிற்கிற துணிபு எனக்கு இருக்கிறது. என்னுள், உள்ளின் உள், அகமும் புறமுமாய் வீறி எழும் அசிங்கங்கள், சின்னத் தனங்கள், கயமைகள், கொடூரங்கள் என்னுள் நோக ஏற்றிய வேதனைகளின் சாரத்தில் புத்தம் புதிய உயிர்ப் பூவின் இதழ்களெல்லாம் நளினமாய் நிமிருகிறபோது அவை நிறமற்ற பூக்கள் தாம். என்றோ எப்பொழுதோ நிமிர்ந்து நிற்கிற இதழ்களில் சத்தியத்தின் குரலில் தெரியும் வண்ணங்கள் படிந்துவிடுமோ?

ஆனாலோ, இந்தப் புதிய உணர்வின் அலறல் பழையனவற்றின் அவநம்பிக்கையில் கிளர்ந்தெழுந்ததன்று. புதியனவாய்ச் சத்தியத்தின் உருவத்தைப் பார்த்துவிட வேண்டுமென்ற துடிப்பில் பிறந்த உணர்வு. சமாதானமாய் எது எதுவோ பிறக்கின்றன.

கதோ உபநிஷத்தில் வருகிற நசிகேசன் காற்றுக்கு அலைபாயாத தீபமொன்றை ஏந்தியபடியே நடந்து போகிறாற்போல நெற்றிக்கு நேரே தெரிகிறது. தீபத்தின் கதிர்களை அலைத்து அலைத்து அவிக்கச் சுற்றுப்புறமெங்கும் புயல்வீசக் கருக்கூட்டிக் கொண்டுதான் இருக்கிறது. ஒரு சமயம் மங்கி அதன் ஒளிக் கற்றைகள் பக்கென்று அவிந்து போக அவை திரண்டு நிமிர்ந்து நின்றாலும் அக ஒளிக்கற்றைகள் சத்தியத்தின் மங்காத இரகசியத்தைப் பேசிய படியே நிற்கின்றன.

"நசிகேசா"

"நசிகேசா"

"நசிகேசா"

எனக்கோ சிரிப்பு மூளுகிறது.

நேற்றைய உலகத்தின் செய்திகள், இன்றைய மனிதன் செய்திகள் போலும், வறுமையும், பற்றுக்கோடும் அற்ற வாழ்க்கையுமாய் நிற்கிற பல மனிதர்கள் நாடும், மொழியும், நிறமும், உருவமும் முற்றற வேறுபட்ட மனிதர்கள் என்னுள். இதுதான் நாங்கள். இதுதான் பிரத்தியட்ச உலகம். அது பரிகாசமாய்ச் சிரிக்கிற சிரிப்பில்லை.

வெகு தூரத்துக்கு ஆப்பால் நிற்கிற அந்த மனிதன் 'மனிதர்கள் நாங்கள்' என்ற ஒற்றுமையின் அடிச் சக்தியில் தனக்காய் 'என்ன செய்தாய், செய்கிறாய், செய்யப் போகிறாய்' என்று கேட்க முனைகிறபோது.... கண் முன்னால் உருவெளித் தோற்றமாய்த் தெரிகிற நசிகேசனை, அவன் அமரத்துவமான ஆத்மாவை, உபநிஷத்தின் மேம்பாட்டை, அதன் இன் ஒளியில் நான், என்னுள் தோற்றும் - தோற்றும் விழுந்து புரண்டும் மலர்விக்க முயன்றும் முயன்றதையும் இதோ உனக்காய் முன்னும், இப்போதும், என்றும் தர முயன்று கொண்டிருக்கிறேன் என்கிற என் மனநிலை அவலட்சணமாய்த் தான் தெரிகிறாற்போல இருக்கிறது.

கண் முன்னால் உருவெளித் தோற்றமாய்த் தெரிந்த நசிகேசன் மறைந்து விட்டான், இப்போது இந்த உலகத்து மனிதன் நிற்கிறான்.

மலசலகூடம் துப்பரவு செய்கிற தொழிலாளி.

"பசிக்கிதா இந்த வெள்ளெனவா?

எனக்கே தெரியும், அர்த்தமற்ற கேள்விதான். அவன் அவனாய் நிற்பதற்கு நம்மில் பலர் அப்படி அந்த ரகத்தில் கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்டுக் கொண்டு நிற்கிறதுதான் காரணம் என்கிற சங்கதி என் உள்ளத்தே சரேலென்று வீங்கி எழுந்தது.

நசிகேசனையும், அக உணர்வுகள், சத்தியத்தின் குரல் சகலத்தையுமே துறந்து விட்டுக் குசினிக்குப் போனேன். காலை உணவுக்காய் அடுப்பில் அவிந்து





கொண்டிருந்த இடியப்பத்தில் ஒன்றை எடுத்துப் பிசைந்தபடியே வெளியே வந்தேன்.

"இந்தா"

கைகளில் இடியப்பத்தைப் பிசைந்து போட்டேன். அப்போது சடுதியாய் என் கைகள் பின்னுக்கு நகர்ந்தன. அவன் கைகளில் மிகச் சிறிய இடத்தில் மலத்துண்டொன்று ஒட்டிக்கொண்டிருந்தது.

"அதைக் கொட்டு"

அருவருப்புடன் என் குரல் பிறந்தது.

"எதை?"

உன் கையிலிருப்பதை"

"ஏன்?"

"உனக்குக் கண் குருடா? அங்கை பாரேன்?"

அவன் சிரித்தான். சிரித்தபடியே அந்தப் பிசைந்த இடியப்பத்தை விழுங்கினான்.

நான் அருவருப்புடன் பார்த்தேன்.

அவன் முணுமுணுத்தான். "ப்பூ, இந்தச் சுத்தத்தைப் பார்த்தா காலமே கடையிலே திங்கவேணும். கடையில் திங்கக் காசுவேணும்".

அவன் எழுந்து போய்விட்டான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

நசிகேசன் போய்விட்டான்.

வீதியில் மல வண்டியின் சத்தம் எழுந்து கொண்டிருந்தது. சத்தியத்தின் ஒலி என் செவிப் புலனில் தெளிவாய் விழுந்தது.

## கலாசாரம்



## நூல் அகம்



"தொடரும் தவிப்பு" என்றொரு நூல் தமிழ்நாட்டில் வெளிவந்திருக்கின்றது. இந்த நூலினை எழுதியவர் பெண் எழுத்தாளர் உமா ஆவார். புங்குழலி என்ற புனைபெயரில் எழுதியிருக்கின்றார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேரில் ஒருவரான பேரறிவாளனின் தாய்




அற்புதம்மாவின் உணர்வுகள்தான் நூலின் களம். தமிழ்நாட்டில் யாருமே எழுதத் தோன்றாத உண்மை நிகழ்வுகளைக் கூட இருந்து பார்த்து வேதனைகளையும். நியாயத்திற்காகப் போராடிய அந்த உருவை நிலை நிறுத்தி. நகர்த்திச் சென்றிருக்கிற விதம் உயிராகத்தான் இருக்கின்றது.

நூலின் ஒருபகுதி எட்டு ஆண்டுகளாக சிறைச்சுவர்கள் மட்டுமே என்பது வெறும் சொல்லுக்காகச் சொன்னதல்ல. மிகையுமல்ல. ஏனெனில் புந்தமல்லியில் நீதிமன்றமும். சிறையும் ஒரே வளாகத்தில் அமைந்திருந்தபடியால் நீதிமன்ற விசாரணை நாட்களில்கூட வெளியுலகைப் பார்க்கும் வாய்ப்பு இல்லாமல்போனது.


சிறை. நீதிமன்றம். வழக்கு சார்ந்த மனிதர்கள். காணவரும் உறவினர்கள். நண்பர்கள் தவிர வேறு மனித முகங்களே காணாது ஓடிவிட்டது. 8 ஆண்டுகள் பகலிலாவது பரவாயில்லை. மாலை 6 மணிக்கு மேல்தான் இன்னும் கொடுமை. தனி அறையில் பூட்டி விட்டு பிறகு தனிமை. தனிமை தனிமை மட்டுமே துணை.

இப்படி ஒரு வாழ்வை மகன் வாழும்போது எத்தகு வாழ்க்கையுமே கசந்துவிடும் ஒரு தாய்க்கு. அந்த நிலையில்தான் இருந்தார் அற்புதம். அறிவின் நெற்றியில் கம்பிபதித்த தடத்தைக் காணும் போதெல்லாம் தன் மகன் சிறைக்கம்பியுடே வெளியே பார்த்துக்கொண்டிருப்பான் என்பது புரிந்தது.

ஒருவேளை விசாரணையின் முடிவில் அவர்கள் குற்றமற்றவர்கள் என்பது நிரூபணமாகி. விடுதலையானால்கூட இழந்துவிட்ட இந்த எட்டுவருட வாழ்க்கையை யார் மீட்டுத்தருவார்கள்? இந்த அரசாங்கமா? காவல்துறையா. சிறை அதிகாரிகளா அல்லது இத்தனைக்கும் காரணமாக சி.பி.ஐ ஐயா. இந்தக் கேள்வி அற்புதத்தின் மனதில் எழும்பாத நாளே இல்லை எனலாம். ஒவ்வொரு நாள் கழியும்போதும் 'இதோ என்மகன் வாழ்வில் பாதிக்கப்பட்ட மற்றொரு நாள் முடிந்தது என்ற எண்ணம் தான் ஏற்படும். ஒவ்வொரு மகிழ்ச்சியான நொடிகளின்போதும் என் மகன் இதை அனுபவிக்காது வாடுகிறானே' என்ற வருத்தம் மேலோங்கும் என்று எழுதும் போது தாயின் தவிப்புப்புரியும்.

சிறையில் வாழ்க்கை நியாயத்திற்காகப் போராடியவனுக்கு இனிமையானது. அவன் சிறையில் இருக்கும் ஒவ்வொரு நாளும் வரலாற்றின் பதிவாகும். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப் பட்டவர்களுடன் பழக்கப்பட்டதனால்தான் இப்படியாக எழுதமுடிகிறது. தமிழ்நாட்டில் இப்படியான உண்மையான உயிர் உள்ள நூல்கள் வெளிவருவதுமில்லை. இந்த நூல் வெளிவந்திருக்கிறது. எனவே தமிழ் உறவுகள் இதனைக்கண்டிப்பாகப் படிக்க வேண்டியது அவசியமாகும். பழம்பெரும் தமிழர் தேசிய இயக்கத்தலைவரும். ஈழவிடுதலைக்காகக் குரல் கொடுத்தவருமான பழ.நெடுமாறனின் மகள் தான் இந்த உமா என்பவராவார். இவரின் 'நேரிய பார்வை உறுதிதளராத நிலைப்பாடு அனைத்தும் குறையாமல் உமாவிடம் உண்டு. -வா

இயற்கையிடமிருந்து பிளவுபடாமல் நம் வாழ்வு இயல்பாகத் தான் இருந்தது. உலகில் காமம் கொண்டாடத் தெரிந்த மூத்த அகமரவு நம்முடையது. வந்தவர் போனவரெல்லாம் நம் வாழ்க்கைக் குள் நுழைந்தபிறகுதான் நாம் முகமூடிகள் அணிந்து பழகினோம்.



## தரிசாகிப்போன காதல்...!

சிறு தெய்வம்... பெருந்தெய்வம்
நீச பாஷை... தேவ பாஷை
சிற்றின்பம் - பேரின்பம் என்கிற கருத்துருவாக்கப் பொய்களுக்குள் புதைந்து கிடக்கிறது தமிழ் காதல்.

மதவாதிகளே... நம் ஆண் பெண உயிர் விழாக்களைக் கொள்ளையடித்த திருடர்கள்... எல்லை கடந்த தீவிரவாதத்தைக் காதலுக்குள் கொண்டுவந்து குட்டிச்சுவராக்கியதும் அவர்களே!

காமம் என்பது உடல் நலம் சார்ந்த உயிர் உழவு. உயர்விதைப்புகள், உயர் விளைச்சல்கள் அறுபடாத இயற்கைத் தன்மையிலிருந்து அவர்கள் நம்மை எங்கெங்கோ திசைதிருப்பிவிட்டதனால் தான் நம் காதல் வாழ்வு தரிசாகிப்போனது.

இன்று... அமெரிக்காவிலிருந்து ஒரு கணினி முதலாளி கோடிக் கணக்கில் கொண்டுவந்து.... ஒரு நோயை ஒழிப்பதற்காகக் கொட்டப் போகிறேன் என்று இங்கே சொல்கிற போது... எவ்வளவு அருவருப்பாக இருக்கிறது!

அகம்... புறம் அனைத்திலும் நாம் நமது விழுமியங்களை இழந்து இளைத்துவிட்டோம் என்பதால்தான் காலில் விழுந்து சலுகை பெறவும், இடம்பெயர்ந்து கூலி பெறவும் பழகிப்போன அடிமைகளாய் ஆனதனால்தானே... இத்தகைய பணத்திமிர் ஊடுருவல்கள் நமது பண்பியலைப் பதம் பார்க்கின்றன!

இத்தகைய சிந்தனைகளின் ஊடாகத்தான் இன்று எழுதப்படுகின்ற ஏராளமான காதல் கவிதைகளையும் பார்க்கிறேன். அழுத்தி வைக்கப்பட்ட இசை... அழுத்தி வைக்கப்பட்ட கடல்... அழுத்தி வைக்கப்பட்ட பேச்சு... என்பன போலவேதான் இந்த இனத்தில் அழுத்திவைக்கப்பட்ட காதலும்! அழுத்திவைக்கப்பட்ட அனைத்தின் மீதும் உலகமயமாதலின் வணிகப் பொருட்கள் கூறுகட்டி விற்கப்படுகின்றன... நான் எழுதும் திரையிசைப் பாடல்கள் உட்பட!

- மதி

## நிராசையின் அத்திவாரம்

இப்போதெல்லாம்
நம் உள்ளங்கள்
மட்டுமல்ல.....
பார்வைகளும்
ஒன்றோடு ஒன்று
முரண்பட்டவை தான்!

நிசப்தமான
அர்த்த இராத்திரியில்
தூக்கத்தை தொலைத்த
விழிகளோடு - என்னால்
உரை எழுத முடியாத
உந்தன் அர்த்தமற்ற
மௌனங்களினதும்
பார்வைகளினதும்
மொழிபெயர்ப்புக்களை
அர்த்தமுள்ளதாக
அர்த்தப்படுத்திக்
கொண்டாலும்
என் ஒவ்வொரு
விடியல்களும்
அஸ்தமனப் பொழுதாகவே
உதயமாகின்றன

உன்னோடு
கூடிக்குலாவி - உந்தன்
மனத்திரையில் இருந்த
உன்னை அழகுபடுத்தும்
உன் இடது வழியோரத்து
மச்சம் இரண்டு கூட
என்னை அச்சப்படுத்தி
உன் நினைவுகளின்
உதவியோடு - என்னை
நிர்மூலப்படுத்துகின்றன.


இப்போது
உன்னால்
ஒரு தலையாய்
ஆக்கப்பட்ட - என்
காதலுக்கும் - என்
இளகிய மனசிற்கும்
இது பழகியதொன்று

கடல் வற்றிக் கருவாடு
தின்னலாம் - என்று
குடல் வற்றிச் செத்த
கொக்கினைப் போன்று
இந்த உடலும்
கன்னி உன்னை
எண்ணி எண்ணியே
அழிந்து போகும்

அந்த நிராசையின்
அத்திவாரத்தை
நான்......
இப்பொழுதே
இட்டுவிட்டேன்!

விமலன்

## உரைநடை



## உயிராஞ்சலி

உனது ஆலயம் குளிர்நிலவில் முழுகிக் கிடக்கிறது.
வெயில் காய்ந்து வந்தபோது, இளைப்பாற உன் நிழல் கிடைத்தது.
இப்போ 'போ' என்கிறாய்.
உன் "நிஜம்" மறைத்துச் சோதனை செய்கிறாய்!
நீ 'பொய'யென்று நம்பி நான் போய்விடவேண்டுமா......!
இந்த உலகத்தைப் போலவே நானும் சாதாரணமாக
உன்னை விலத்திப் போய்விட வேண்டுமா.....?

உனது தீபம் இன்னும் மனதுக்குள் ஒளிர்ந்து கொண்டுதானிருக்கிறது.
வெளியே கருமிருட்டு.... உனது முகம் எப்படி மறந்து போயிற்று!
உலகின் ஆரவார இரைச்சல் உனது 'நிஜத்தை' அள்ளிக்கொண்டு போயிற்றோ....?
சுயநலங்களும், ஆசாபாசங்களும்
உன்னிடம் ஒளிர்ந்து கொண்டிந்த ஜீவிதத்தைப் பறித்துக் கொண்டு போயினவோ......?

உன்னிடம் எனக்காக மட்டுமே ஒளிர்ந்து கொண்டிருந்த
அந்த அருட்துளி எங்கு போயிற்று......?
உலகின் எந்த விளிம்பில் அந்த ஒளி சிந்திச் சிதறிப் போயிற்று.....?
உனது முகத்தில் வழிந்த ஒளி காணாமல் போனபிறகுதானே இப்படி இருட்டோடு இருட்டானாய்......?

நீ அழைத்த குரல்கேட்டுத் தாமதமாய் வந்ததாலா
அந்த ஒளி நழுவிப் போயிற்று....?
நழுவிப்போன அந்த ஒளியைத்தேடுகிறேன்.
எந்தக் கடலுக்கடியில், எந்த மீன்குஞ்சின் வயிற்றில்
அந்த ஒளி பதுங்கியிருக்கிறது....?
எந்தப் பச்சை மலையின் உச்சியில் ஒரு ஒளிப்பொட்டாக அது எட்டிப்பார்க்கப் போகிறது......?
பறந்து கொண்டிருக்கும் எந்தப் பறவையின் அலகுக்கிடையில் அது இசையாய் உட்கார்ந்திருக்கிறது.....?

எல்லாமுமான உன் ஒளி மறைந்து போகுமா.....?
எல்லாவற்றிலுமே சுடர்விடும் உன் தர்மம் கற்பூரமெனவே கரைந்து போகுமா?
கருணையின் வடிவமென, உயிர்களுக்கு மீட்சி தரும் உன் சத்தியம்
காலத்தின் முன் கைகட்டிநிற்குமா.......?

இல்லை....... கிரகணம் மறைக்கிறது.
உனது ஒளியின் வீச்சைக் கண்களில் அறைவதற்காக நீ
இருட்டையும் உன்னோடு ஐக்கியப்படுத்திக் காட்டுகிறாய்.
உனது ஒளியின் மகிமையைக் கண்கள் புரியவேண்டும்.
என்பதற்காக, விழிகளில் வேதனை சொரிகிறாய்.

இன்னும் நம்பிக்கை தகராமல் விழிமூடிய தரிசனத்தில்
லயித்திருக்கிறது மனது.
கண்மூடிய தியானம் கலைத்துக் கல்லெறிகிறது காலம்.
நிஜத்துக்குத் திரும்பு என்கிறது உலகியல்.
எது நிஜம்.... திறந்த விழிகளுள் தெரியும் இருட்டா......?
மூடிய விழிகளுள் தெரியும் ஒளியா....?
எனது கண்களுக்குள் தெரிகின்ற ஒளிமட்டும் போதாதே உன்னை நான் உலகிற்கு நிரூபிக்க.....

உனது ஒளியை நீ புறத்தேயும் வழிய விடமாட்டாயா......?
எல்லாரும் 'காண்' உன் 'ஒளியை' நீ நிரூபிக்க மாட்டாயா...?
பொய்யுள் வாழ்ந்த வாழ்வைத்தள்ளி இனி 'மெய்வாழ்க்கை' உணர்த்தாயோ......?

காற்றில் ஏற்றப்பட்ட சருகென உன்முன் வந்து விழுந்தேன்.
ஆறுதலாய் அமைதி தந்தாய்.
இப்போது நீயே காற்றாகி ஏற்றுகிறாய்......
'எங்கேயாவது போய்க்கொள' என்கிறமாதிரி.
உன் முன் விழுந்த சருகு இனிப்பறப்பது எங்ஙனம்?
உனது பாதங்களே சமர்ப்பணம் என்றான பிறகு
போக்கிடம்தான் இனி ஏது...?

உலகளவிற்குப் பரந்திருந்தது உன் அருள்
உனது அருள்நிழலிலிருந்து நான்தான் சற்று விலகிப்போனேன்.
திடுமென்று உன் நிழலின் ஈர்ப்பில்
திரும்பி வருகின்றபோது பாதை நீளமாய்த் தெரிகிறது.
உனது நிழல் விலகி விலகிப்போய் 'கண்ணாமூச்சி' ஆடுகிறது.

உனது சந்நிதியில் தீபங்கள் ஒளிர்கின்றன.
இடையில் ஒரு திரைவிழுகிறது. அது உன்னை மறைக்கப் பார்க்கிறது.
செய்த தப்புகளுக்கான தண்டனை என உன்காட்சி
எனக்கு மறுக்கப்படுகிறது. திரை விலகுமென்றெண்ணி உன்னைக் கண்மூடித் தரிசிக்கிறேன்.

திரைவிலகுமா? திரையை விலக்காமலே நீ இறுகிப் போய்விடுவாயோ....?
உன் தரிசனம் சித்திக்காமலே போகக் கூடுமோ.....?
இருந்தாலும் கண்மூடிக் காத்திருக்கிறேன்.

ஒளிர்ந்து கொண்டிருக்கும் தீபங்களைக் காற்று
அணைத்துவிடாதபடி கைகளால் பொத்தியபடி காத்திருக்கிறேன்....

மௌனத்தில் இடறுகின்றன வார்த்தைகள்.
இருட்டுக்குள் தடுமாறுகின்றன பாதங்கள்.
வார்த்தைகளற்று, சுவடுகளற்று, அசையாமல் விழித்திருக்கிறது உன் மனம்.
ஒரு சின்ன ஓசையெனினும், உன் உயிர்ப்பை எனக்குப் புலப்படுத்தி விடுமென.....
அந்த
மயிரிழையின் நுட்பமான 'உயிர் அசைப்பிற்காய' காத்திருக்கிறேன்.

உனது எளிமை என் மனதைக் கொள்ளை கொள்கிறது.
ஆரவாரமாய் நீ பவனி வரும் போதெல்லாம்
ஒதுங்கி ஓரமாய் நின்று பார்க்கத்தான் முடிகிறது!
மற்றவர்கள் கலைந்து, உன் அலங்காரம் கலைத்து
எளிமையாய் நீ இருக்கையில்தான்
நான் உன்முன் வந்தமர்கிறேன்......

உனது அலங்காரங்களுக்கப்பால், உனக்குள் ஜொலித்த
அந்த மென்சுடரின் அசைவைத் தானே
இத்தனை நாள் மனதுக்குள் போற்றிக்கொண்டிருந்தேன்.
இப்போது உன்னுடைய ஒளியையும் ஒரு ஆபரணமென எண்ணிக்
கழற்றியெறிந்து விட்டாய்.......
'உனக்குள்', உன் உயிரோடு கலந்த ஒன்றெனவேயிருந்த 'அதை' நீ மறந்து போய்விட்டாயா....?
இல்லாவிட்டால், நீயும் காலத்தோடு இசைந்து போக
முடிவெடுத்து விட்டாயா?

இன்னும், வெறு வெளியிலும், அலையிலும், உன் தொலைந்து போன ஒளியைத தேடுகிறேன்.
அந்த ஒளிப்புள்ளியைச் சிறையெடுத்து, உன்னுள்
அதைத் தங்கவைக்கும் வரைக்கும் கண்கள் மூடி உன்னை 'என்னுள்ளே' காண்கிறேன்.

- தாட்சாயிணி.


## சுயம் பற்றி...

முகில்களிடையில்
ஒழிகிறது நிலவு
அதற்காய்.......
தொடர்ச்சியாய்
அழுதுகொண்டேயிருக்கிற
குழந்தை.....
கண்ணீரைக்
கடிதங்களால் நிரப்பி
நீட்டுகிற அந்த
கடைவீதிச் சிறுவன்......
எல்லோருடைய தோடுகளும்
அவள் கண்களில் நிரம்ப
பார்த்துக் கொண்டேயிருக்கிற
வேப்பங்குச்சிக்காரி........
பூக்களின் கவிதைகள்
தன் காதலியைப்
பாடுவதாய்ச் சொல்கிற
கவிஞன்.....
காசைக்கேட்காமல்
சாப்பாட்டை கேட்டு - என்
கண்ணீரைச் சோதிக்கும்
தாடிக்காரன்.......
சட்டென்று அதிர்கிறது மனசு
இவர்களிடையில்...?
எப்போதோ -
கேள்விகளிற்கொழிந்து
தொலைந்து போயிருந்தது
என் சுயம்............?

த.அகிலன்

அரசியல் நோக்கு

கே.ரி.கணேசலிங்கம்



# தீர்வற்ற சமாதானத்தை தொடர விரும்பும் இந்தியா

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு மீண்டும ஒரு சமரை நோக்கி நகர்த்தப்படுகின்றது. பிராந்திய அரசியல் சமநிலையில் இனப்பிரச்சினை கொதிநிலைக்கான களத்தை விரித்துள்ளது. இதில் மிக நீண்டகாலமாக காணப்பட்ட அமைதி நிலையை புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணத்துடன் முற்றாகத் தகர்த்துவிட்டனர். அவர் இலங்கைக்குள் காணப்பட்ட சமாதானக் குழப்பத்தை பிராந்திய மட்டத்துக்கு கொண்டு சென்று குழப்பிவிட்ட அரசியல் வாதியாகிவிட்டார். இதுவே புதிய அரசின் கொள்கையாகும். எனவே ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்துடன் எழுந்துள்ள பிராந்திய சர்ச்சையை விரிவாக நோக்குவோம்.

முதலில் ராஜபக்ஷவின் விஜயத்தின் நோக்கத்தை கவனத்தில் கொள்வோம். புதிய பிரதமரின் முதல வெளிநாட்டுப் பணயம் என்பதில் அதற்கு அதிக அர்த்தங்களும், முக்கியத்துவங்களும் கொடுக்கப்பட்டது யதார்த்தமானதாகும். பிரதமர் பதவிக்கு வேறுபலரை நிறுத்த ஜனாதிபதி முயன்றபோதும், இந்தியாவின் வற்புறுத்தலிலேயே மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இந்தியத் தரப்பில் ராஜபக்ஷவுக்கு மென்மையான அணுகுமுறையும், போக்கும் உண்டென்பதுடன் அதன் விசுவாசத்தைக் காட்டவேண்டிய பொறுப்பும் ராஜபக்ஷவுக்கு இருக்கின்றது. இதனால், இந்தியத்தரப்பைத் திருப்திப்படுத்துவதில் அதிக விட்டுக்கொடுப்பை பிரதமர் ஆற்றியதுடன், இலங்கைத் தமிழரையும், இனப்பிரச்சினையையும் கைமாறாகப் பலியிடுவதற்கு விரும்பிய பிரதமர் இனப்பிரச்சினை விடயத்தை முதன்மைப்படுத்தினார். இது இலங்கையில் ஆட்சிக்கு வந்த சிங்களத்தரப்பு அரசியல் தலைமைகளின் பொதுவான இயல்பாகும். தமது ஆட்சிக்கும், அதிகாரத்துக்கும், தமது சிங்கள மக்களுக்கு ஆபத்துவரும் போதெல்லாம் தமிழர் மீது அதன் பழியைச் சுமத்திவிடுவது வழமையான அரசியல் தான். அதனையே பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஆற்றியுள்ளார். அவரது முதன்மையானதும், முக்கியமானதுமான நோக்காக இருந்த இனப் பிரச்சினையில், இந்தியத் தலையீட்டை எப்படியாவது ஏற்படுத்துவதென்பது கணிசமாக நிறைவடைந்துவிட்டது. இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியத்தரப்பின், இராணுவ ஆயுதத் தளபாட உதவியையும், இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கையையும், நிறைவேற்றும் எண்ணத்தை பிரதமர் கணிசமாகச் சாத்தியப்படுத்திவிட்டார். மேற்குறிப்பிட்டவை சாத்தியப்படுகின்றதோ, இல்லையோ ஆனால் அதனால் இதுவரை பின்பற்றப்பட்டு வந்த புரிந்துணர்வில் கசப்புணர்வு ஏற்பட்டுவிட்டது.

ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தின இரண்டாவது இலக்கு பொருளாதாரம் பற்றியது. அதில் கிராமியப் பொருளாதாரம் பற்றிய உடன்பாடுகள் இலங்கையின் விவசாயம், வர்த்தகம், நெடுஞ்சாலைகள் போன்றவற்றுக்கான ஆதரவை இந்தியாவிடம் ராஜபக்ஷ கோரியதுடன், 10 கோடி நிதி உதவியை 15 கோடி ஆக அதிகரிக்கும்படியும் கோரியிருந்தார். இவ்வாறு காணப்பட்ட இணக்கப்பாட்டின்படி இரு நாடுகளதும் வர்த்தக உறவை அதிகரிக்க உதவியது.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவின் குழுவிற் சென்ற ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர் அநுர குமாரதிஸநாயக்க இந்தியாவுடனான சந்திப்பில் அதிக இலாபத்தை ஈட்டியவர் எனக்கூறலாம். அவரது விஜயம் ஜே.வி.பி இன் அரசியலையும், பொருளாதாரத்தையும் கருவாகக் கொண்டது. ஜே.வி.பி யை பிராந்திய அரசியலுக்குள் நுழைத்ததுடன் இந்த விடயம் இலங்கையின் கிராமிய, வர்த்தக, விவசாயத்துறைகளில் தமக்குள்ள அக்கறையைக் காட்டியிருந்தது. அரசியலிலும் இந்தியத்தரப்பை அப்படியே உள்வாங்கியுள்ள ஜே.வி.பி பொருளாதார நெருக்கத்தை ஏற்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் தமது செல்வாக்கைச் சாத்தியப்படுத்தலாமெனக் கருதுகிறது. இதற்கு சுதந்திரக்கட்சியையும், பிரதமரையும், ஜனாதிபதியையும் படிக்கற்களாக ஜே.வி.பியினர் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், இதற்குப் பின்னாலுள்ள ஆபத்தை ஜே.வி.பியினரோ, சுதந்திரக் கட்சியின் தலைவர்களோ விளங்கிக் கொள்ளவில்லை. அவர்கள் கருதுவதெல்லாம் தமிழர்களின் அரசியலையும், போராட்டத்தையும் இந்தியர்கள் வந்து அழித்தொழித்துவிட்டால் போதுமென்பதாகும் இந்தியர்கள் அழிப்பதோடு மட்டும் தமது பணியை முடித்துக்கொள்பவர்களல்ல. 1971 ஆம் ஆண்டில் வங்களாதேஷத்தை பிரித்ததோடு அவர்கள் தமது பணியை நிறுத்திக் கொள்ளவில்லை. எப்படி வங்களாதேஷத்தை சிதைக்கமுடியுமோ அப்படியே சீரழித்துவிட்டு வெளியேறியவர்கள் இந்தியர்கள். பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய காலத்திலும் அதன் பின்னர் இந்தியர்களுக்கு எதிரான சட்டங்கள் கொண்டு வரும்வரையும் இலங்கையின பொருளாதாரத்தில் வர்த்தகர்களாகவும், முகவர்களாகவும், முதலாளிகளாகவும் விளங்கியவர்கள் இந்தியர்கள். இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான பங்கை கொண்டிருந்தவர்கள் இந்தியர்கள். அந்த நிலைக்கே தற்போதைய கூட்டமைப்பு அரசு வகுக்கும் கொள்கைகளில் இலங்கையின் அடைவாக அமையும். ஏற்கனவே ஜனாதிபதி 1998 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட வரியற்ற வர்த்தக உடன்படிக் கையால இலங்கையின் சிறு உற்பத்திகள் முடிவுக்கு வந்துவிட்டன. இதனால், ஏற்படப்போவது இலங்கையின் இந்திய மயவாக்கத்துக் கான தளத்தை விரிவுபடுத்துவதாகவே அமையும். இதில் வடஇலங்கை தப்பித்துக் கொண்டாலும் தென் இலங்கைக்கு அதிக ஆபத்துக் காத்திருக்கிறது.

இலங்கை போன்ற உலக நாடுகள் அநேகமானவை பிராந்திய சக்தியை முறியடிக்க சர்வதேச சக்தியையும், சர்வதேச சக்தியை முறியடிக்க பிராந்திய சக்தியையும் பயன்படுத்தும் வெளிநாட்டு அரசியல், பொருளாதாரக் கொள்கையை வகுப்பதே அதிக இலாபகரமானதாகும். மாறாக தனித்து ஒரு கொள்கையை வகுப்பார்களாயின் இறுதியில் ஏதாவது ஒரு சக்தியிடம் அகப்பட்டு அடிமையாகி அடையாளத்தை இழப்பதாகவே அமையும். அதிலும் இலங்கைக்கு அயலிலுள்ள மிகப் பெரிய நாடு இந்தியா என்ற வகையில் மேற்படி கொள்கை வகுப்பு மிகப் பிரதானமானது.

அடுத்து, இந்தியத்தரப்பு இலங்கைத் தமிழரின் அரசியலை எப்படி நோக்குகின்றது என்பதை அவதானிப்போம்.


முதலில்- மன்மோகன் சிங்கை சுற்றியிருக்கும் கொள்கை வகுப்பாளர்கள் ராஜீவ் காந்தி காலத்து விசுவாசிகள் என்பதை கருத்திற் கொள்வோம்-

அவர்கள் பிராமண ஆதிக்கத்தின் கையாட்கள் என்பதையும், அதன் விருப்புக்களை அமுல்படுத்த முயலுபவர்கள் என்பதுடன் ஒரு வகையான எஜமானிய அரசியல் நடத்தும் கனவான்கள் என்றும் கூறலாம். இவர்களது ஆளும் அரசியற் தலைமையிடம் பலவீனத்தைக் கண்டு கொள்வார்களாயின் தமது விருப்புக்களை நிறைவேற்றிவிடுவார்கள். ராஜீவின் அரசியல் ஞானமற்ற போக்கும், பலவீனமான அரசியற் துணிவையும் எப்படிப் பயன்படுத்தி இந்தியாவை- இலங்கை விடயத்தில் தலையிடச் செய்தவர்கள், தற்போதைய பிரதமரான மன்மோகன் சிங் அரசியலனுபவமற்றவர் என்பதுடன், இலங்கை போன்ற அரசியல் விடயங்களைக் கையாண்ட அனுபவம் எதுவுமற்றவர். இதனால், இலங்கை விடயத்தில் இவரும் ராஜீவ் காந்தியைப் போன்றவர் தான். இதனால் புதுடெல்கி அரசியற் கனவான்கள் பிரதமரின் பலவீனத்தை தவறாகப் பயன்படுத்த முயலக்கூடும். இதனை அடையாளப்படுத்தும் தகவல் ஒன்றை புதுடெல்கி அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். "கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவின் மீது அமெரிக்க பாகிஸ்தானிய செல்வாக்கு அதிகரித்து வருவதை சமப்படுத்த புதுடெல்கி தயாராகிவிட்டதெனறு" ராஜபக்ஷ விஜயத்திற்குப் பின்னர் இந்தியத்தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது. இது மீண்டும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்த காலத்தை நினைவுபடுததுகின்றது. இலங்கை விடயத்தை இந்தியா அமெரிக்காவுக்குள்ளாலும், பாகிஸ்தானுக்குள்ளாலுமே பார்க்கின்றது என்பதை இது விளங்கப்படுத்துகின்றது. இந்திய - அமெரிக்க, இந்திய - பாகிஸ்தான் முரண்பாடுகளால் இலங்கை மக்கள் இந்தியத் தலையீட்டை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்தியாவின் நலனுக்காக தமிழர்தரப்பு அழிக்கபபடுவதும், போராட்டம் நசுக்கப் படுவதும் வரலாறாகிவிட்டது.

இந்தியா இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய சூழலைப் பயன்படுத்திக் கொண்டு தனது நலனை பாதுகாக்கத் திட்டமிட்டுவருகின்றது. ஜே.வி.பியை புதியசக்தியாக வளர்த்து, அதனை தமிழருக்கு எதிரான அரசாக உருவாக்க இந்தியத்தரப்பு முயலுகின்றது. இலங்கையில் அமைதி நிலவாத குழப்பம் தொடருகின்ற சூழல் இந்திய நலனுக்கு பாதகமற்றதென்று நோக்குவதுடன் இந்தியத்தரப்பு சமாதான முயற்சிக்குள்ளாலும், போருக்குள்ளாலும் தனது அரசியல் இலாபத்தை அடையவிரும்புகின்றது என பதை அதன் நடவடிக்கையூடாக உணரமுடிகின்றது.

இந்தியத்தரப்பின் சமாதான உணர்வென்பது தனது சக்திகளின் ஊடுருவலையும், தீவிர நடவடிக்கையையும் சாத்தியப்படுத்துவதென்பதேயாகும். மேலும் தமிழர்தரப்பின் பலவீனத்தை சாத்தியமாக்குவதுடன், இலங்கைத் தமிழரின் தனியரசுக்கான போராட்டம் என்பதை படிப்படியாக அழித்துவிடுவதற்கான மார்க்கமாக கருதுகின்றது. போர் வேண்டப்படாத ஒன்றாக இந்தியத்தரப்பு கருதிய போதும் அதற்கான தயார்ப்படுத்தலை ஒரு மிரட்டலாக நோக்குகின்றது. போருக்கான மிரட்டலுக்கூடாக தமிழர்தரப்பை கட்டுப்படுத்திவிடலாமென்ற நோக்குடனேயே இந்தியா செயற்பட்டு வருகின்றது.

இறுதியாக, இந்தியத்தரப்பு சட்டத்தின் வரையறைக்கும், ஒழுங்குக்கும் அப்பால் தமிழர் நாடளுமன்ற உறுப்பினரில் ஒருவரான ஈழவேந்தன் மீதான நடவடிக்கை இந்தியத்தரப்பின் ஆழமான உணர்வைக் காட்டுகின்றது. பெங்களூரில் நடைபெறும் மாநாட்டுக்குச் செல்ல முடியாதென சென்னை விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பிய சம்பவம், சார்க் விதிமுறையை நேரடியாக மீறியதென்பதற்கு அப்பால் தமிழர் அரசியற் தலைமைகளை இந்தியா எப்படி நோக்குகின்றது என்பதையே காட்டியுள்ளது. வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் கண்டு மனமகிழ்ந்த இந்திய எஜமானியம் தனது மறுபக்கத்தை காட்டியுள்ளது. இது மிதவாத அரசியற் தலைமைகளுக்கும்,



இலங்கைத் தமிழர்களுக்கும், இந்திய நலன்விரும்பிகளுக்கும் இன்னோர் புதிய பாடமாக அமையட்டும்.

எனவே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தினால் அதிக மாற்றத்தை இலங்கையும், இனப்பிரச்சனையும் எதிர்நோக்கவுள்ளது. இந்தியா ஜே.வி.பியை புதிய சக்தி மிக்க தரப்பாக கருதுமளவிற்கு ஜே.வி. பியும் இந்தியாவைப் பயன்படுத்தி தனது அடுத்தகட்ட வளர்ச்சியைக் கணக்குப் போட்டுள்ளது. இது அமெரிக்கதரப்பு, இந்தியத்தரப்பு என்ற கோணத்தில் இலங்கை விடயத்தை நகர்த்தும் ஆரம்பக்கட்டமாக மாறும அனுபவத்திலிருந்து பாடம் கற்றவர்களாக இந்தியத்தரப்பு காணப்பட்டால் நேரடி இராணுவ நகர்வுகளை தவிர்ப்பதுடன், பாதுகாப்பான அரசியல் நகர்வையே கருத்தில் கொள்வார்கள். ஆனால், அத்தகைய அரசியல் நகர்வு- போருமற்ற, சமாதானமுமற்றதாக அமையுமாயின் தமிழர் தரப்பு அனைத்தையும் இழக்கும் வரை நிகழ்வதாக அமையும். அதற்கான சந்தர்ப்பம் தமிழருக்கு ஆபத்துமிக்கது. அதனையே பிரதமர் ராஜபக்ஷவின் இந்திய விஜயம் முழுமைப்படுத்தியுள்ளதா என சந்தேகிக்க வேண்டியுள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டே தமிழர்தரப்பு முடிவுகள் எட்டப்படவேண்டும்.

> **'இந்தியா இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய சூழலைப் பயன் படுத்திக் கொண்டு தனது நலனை பாதுகாக்கத் திட்டமிட்டு வருகின்றது. ஜே.வி.பியை புதியசக்தியாக வளர்த்து, அதனை தமிழருக்கு எதிரான அரசாக உருவாக்க இந்தியத்தரப்பு முயலுகின்றது. இலங்கையில் அமைதி நிலவாத குழப்பம் தொடருகின்ற சூழல் இந்திய நலனுக்கு பாதகமற்றதென்று நோக்குவதுடன் இந்தியத்தரப்பு சமாதான முயற்சிக்குள்ளாலும், போருக்குள்ளாலும் தனது அரசியல் இலாபத்தை அடையவிரும்புகின்றது எனபது அதன் நடவ டிக்கையூடாக உணரமுடிகின்றது.'**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்*
*செறினும்சீர் குன்றல் இலர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## விதார் ஹெல்கிசனின் எச்சரிக்கையும் அது குறித்து கூறவேண்டிய கருத்துக்களும்

தங்களால் அழைக்கப்பட்ட சமாதான நகர்வுகளுக்கான அனுசரணையாளரான நோர்வே பிரதிநிதிகளே அலுத்துப்போய்-வெறுப்புற்ற நிலையில் கடும் வார்த்தைகளால் எச்சரிக்கும் அளவுக்கு அமைதிமுயற்சிகளில் போலித்தனமான ஆர்வத்தையும், பொறுப்பற்ற தன்மையையும் காட்டியுள்ளமையானது இப்போது முழு உலகிற்குமே தெரியவந்துள்ளது.

இலங்கையில் தற்போது அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்தத் தவறினால், தற்போது தேக்கநிலையை - உறுதியற்ற நிலையை அடைந்துள்ள - சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஆதாரமான போர்நிறுத்த உடன்பாடானது முறிவடைந்து மீண்டும் யுத்த நிலமை உருவாகி, நாடு ஆபத்தினுள் சிக்கி அழியும் அபாயம் ஏற்படும் சூழல் தோன்றியுள்ளதை வெளிப்படையாகவே அறிவுறுத்தும் வகையில் கூறியுள்ள நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் பேச்சு வார்த்தைகளை மீண்டும் சுமுகமாக - இயல்பான சூழலில் அழுத்தங்களோ, அச்சுறுத்தல்களோ ஏதுமின்றி உடனடியாக ஆரம்பிக்கமுடியும் என்ற சந்தேகத்தையும் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் சில சக்திகள் நெருப்புடன் விளையாடத் தொடங்கியுள்ளமையானது தெளிவாகியுள்ளதாகவும், இது மிகவும் ஆபத்தான செயல் எனவும், இத்தகையோரால் குழப்பத்தை ஏற்படுத்தும் சம்பவங்கள் பல ஏற்படத் தொடங்கியுள்ளதாகவும் எச்சரித்துள்ள விதார் ஹெல்கிசன் இது தொடர்பான அதிருப்தியை எச்சரிக்கைத் தொனியில் கூறியுள்ளதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

ஆரம்பகாலம் முதல் போர்நிறுத்த உடன்பாட்டைக் குழப்பும் நடவடிக்கைகளிலும், சமாதான முன்னெடுப்பு முயற்சிகளை நிராகரித்து எதிர்க்கும் வகையிலும் யார் நடந்து கொண்டார்கள் என்பது, சமாதானத்திற்கு அனுசரனையாளராக செயற்பட முன்வந்த நோர்வே நாட்டின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்மை சமாதான செயற்பாடுகளில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்று யார் நோர்வே அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுத்தார் என்பதும், அவரின் கொடும்பாவி கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் வைத்து எவரால் எரிக்கப்பட்டதென்பதும், யார் நோர்வே தூதரகத்தின் முன்னால், நோர்வே நாட்டின் தேசியக்கொடியை எரித்தார்கள் என்பதும் நோர்வே அரசுக்கு மட்டுமல்ல, சமாதானத்தை வலியுறுத்திநிற்கும் சர்வதே சமூகம் அனைத்திற்குமே தெரியும்.

இன்றும் அவர்கள் தான் சமாதானத்திற்கு எதிராக வியூகம் அமைத்து நிற்கிறார்கள் என்பது, விளக்க வேண்டிய விடயமே இல்லை.

அன்று நோர்வே அரசிடம் எரிக் சொல்ஹெய்மை சமாதான அனுசரணையாளர் பதவியில் இருந்து அதிகார இறுமாப்புடன், மீளப்பெறுமாறு கோரிய அதே ஜனாதிபதிதான், இப்போது ஆட்சி மாறித் தனது கட்சிக் கூட்டணியினர் ஆட்சியில் ஏறியதும் தவிர்க்க முடியாத அரசியல் அவசியத்தின் அடிப்படையில் அதே நோர்வேயின் அநுசரணையை வேண்டி அழைத்தது மட்டுமல்ல, அதே எரிக் சொல்ஹெய்முடன் பேசவும் செய்கிறார் எனில், எல்லாவற்றிற்கும் தேசநலன் மீதான அல்லது சமாதானத்தின் மீதான அக்கறையல்ல காரணம்... அற்பத்தனமான அரசியல் சுயநலமே காரணமாகும்.

ஜனாதிபதி சமாதானத்தை பற்றிப்பேசும் அதேவேளை, அவரது அரசில் அங்கம் வகிக்கும் தோழமைக்கட்சியினர் அதற்கு எதிரான பிரசாரங்களிலும், நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனை அவர் தடுக்காது அதற்கு மௌன அங்கீகாரம் அளிப்பவராகவே இயங்கிவருகின்றார் என்றால், அவருக்கு சமாதானத்தின் மீதான அக்கறை அவ்வளவுதான் என்றே அர்த்தம்.

இன்று கிழக்கில் தோன்றியுள்ள பதற்றமும், பீதியும், குழப்பமும் மிக்க சூழலுக்கு கருணாவையும், கருணாவினால் ஏற்படுத்தப்பட்ட வன்முறைக் குழப்ப சூழ்நிலையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தமிழ் மக்களிடையே பிரதேசவாத வெறியை மூளச்செய்து, அதன்மூலம் தமிழ்த்தேசியத்தை பல வீனமடைய வைக்கும் உள்நோக்குடனும், சமாதான சூழலைக் குழப்பி மீண்டும் போர் நிலையை உருவாக்கும் தீவிர எண்ணத்துடனும் செயற்பட்டுவரும் படைத்தரப்பினரின் நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதியின் ஆசீர்வாதம் கிடையாது என எவரும் கருதினால் அவர்கள் சமகால அரசியலை அறியாதாவரே என்பது அரசியல் நோக்கர்களின் வெளிப்படையான கருத்தேயாகும்.

இதனை அரசோ, ஜனாதிபதியோ, இராணுவத்தரப்போ, நிராகரித்து வந்தாலும், நிகழ்வுகளின் தன்மைகளும், அதன் இலக்குகளும் அவர்களை நோக்கியே குற்றவாளிகளாகச் சுட்டிக் காட்டும் விரல்களை நீட்டி நிற்கின்றன. ஆதாரப்படுத்தி நிற்கின்றன.

இதனை, சமாதானத்தை நேசிக்கும் சர்வதேச மானுடநேய சமூகம் நன்கு அறியும். விடுதலைப் புலிகள் எத்தனையோ சினமூட்டும், சீண்டல் முயற்சிகளை புறந்தள்ளிவிட்டு போர்நிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதை தென்பகுதி சமாதான ஆர்வலர்களே பாராட்டும் சூழலில் அவர்களின் பொறுமையைச் சோதிக்கும் 'சொறித்தனமான' அரச தரப்புச் செயற்பாடுகளையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

ஆனாலும், சமாதானம் என்ற சொல்லை வெறுமனே அரசியல் இலாபங்களை எட்டப் பயன்படுத்தி விட்டுப் போட நினைக்கும் பேரினவாதம் அதன் மீது ஆத்மார்த்த விருப்பினைக் காட்டும் எனத்தோன்றவில்லை.


இதனை நோர்வே அனுசரணையாளர்களும் நன்கு புரிந்து கொண்டிருப்பார்கள் என்பதும் இப்போது உறுதியாகியுள்ளது.

விதார் ஹெல்கிசனின் எச்சரிக்கை வார்த்தைகள் இதனை நிரூபிப்பதாகவே உள்ளது.

நெருப்புடன் விளையாட வேண்டாம் என்ற வார்த்தைகளின் ஊடாக, அவர் எதனையோ பூடகமாக -இறுக்கமாக மட்டுமல்ல, இறுதியாகவும் கூறவிரும்பியுள்ளார் என்பது தெளிவு.

சமாதானமா - யுத்தமா என்பதை தீர்மானிக்கும் சக்தியாக அரசே இருக்கையில் இது அரசை நோக்கிக் கூறிய எச்சரிக்கையாகவே கருதமுடியும்.

## நாடும் நடப்பும்




# கதிர்காமர் சமர்ப்பித்த பிரேரணை; இராணுவத்தினர் மத்தியில் குழப்பம்!

### சிங்களப் பத்திரிகை கூறுகிறது

யுத்தத்தில் பாவிக்கும் ஆயுதங்கள் பலவற்றை இலங்கை இராணுவம் எதிர்வரும் காலங்களில் பாவிக்க முடியாமற் போகும் விதமாக அமைச்சரவையில் கொண்டுவந்துள்ள தீர்மானத்தால் இராணுவத்தினர் மத்தியில் கடும் குழப்ப நிலை தோன்றியுள்ளதாக இரு தின சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது-

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரினால், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின்படி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தின்படி மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால், படைமுகாம்களைப் பாதுகாப்பதற்கு நிலக்கண்ணிகளைப் புதைத்தல் மற்றும் சிறிய வகையிலான மிதிவெடிகளைப் புதைப்பது தடைசெய்யப்படும்.

அதேபோன்று, லேசர் கதிர்களைப் உபயோகித்து தயாரிக்கப்படும் நவீனரக துப்பாக்கிகள் உட்பட மேலும் நவீனரக யுத்த தளபாடங்கள் பலவும், அமைச்சரவையின் தீர்மானத்தின்படி படையினருக்கு தடைசெய்யப்பட்டவையாக அமையும்.

இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை வழங்கவுள்ள அவசர தேவைகளை அடிப்படையாக்கிகொண்டு, ஐக்கிய நாடுகள் சபை சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு அமைய லக்ஷ்மன் கதிர்காமர் அமைச்சரவைக்கு இதனைச் சமர்ப்பித்துள்ளார்.

அமைச்சரவை இது தொடர்பாக தீர்மானம் எடுத்தபின்னர், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம், 24ஆம் திகதிகளில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ள ஐ.நா. மாநாட்டில், கதிர்காமர் இலங்கை அரசின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு, இவை தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (தே)

# 4300 எழுதுவினைஞர்கள் விரைவில் நியமனம்

எழுது வினைஞர்களை அரசாங்க சேவையில் சேர்ப்பதற்கான பரீட்சையில் சித்தியடைந்த 4300 பேருக்கு அரசாங்கம் தாமதமின்றி நியமனம் வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பரீட்சை முடிவுகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

அரசியல் சார்பு எதுவுமின்றி இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

# மோசடிகளை மறைத்துக்கொள்ளவே கருணா கட்சியை ஆரம்பிக்கத்திட்டம்

### கௌசல்யன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா புதிய கட்சியை ஆரம்பிப்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பாதிக்காதுஎன, விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் லங்காதீப பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். இந்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

கருணா புதிய அரசியல கட்சியை ஆரம்பிப்பதற்கு ஆதரவு வழங்கவேண்டாமென நாம் அரசிடம் கோரவில்லை. கருணா அரசியற்கட்சியை ஆரம்பிப்பதானது அவரால் நிகழ்த்தப்பட்ட பணமோசடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவாகும்.

இவ்வாறு அவர் அரசியல் கட்சியை ஆரம்பித்தாலும் இதனைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

எந்தளவு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவராக இருந்தாலும், மோசடிக்காரராக இருந்தாலும், ஒரு அரசியல் கட்சியை அமைத்துக்கொண்டு தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்கு இலங்கையில் சந்தர்ப்பம் உள்ளது. அவர்களுக்கு அரசாங்கமும் பாதுகாப்பு வழங்குகின்றது.

கருணா என்பவர் முதலாம் இலக்க பணமோசடிக்காரன். எங்கள் அமைப்பில் உறுப்பினராக இணையும்போது எங்களுக்கும், இயக்கத்துக்கும் இடையில் உறுதிப்பத்திரமொன்றுள்ளது. எந்தச் சந்தர்ப்பத்திலும் எங்கள் அமைப்பிற்கு எதிராக எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளமாட்டோம் என்பதே அதுவாகும்.

கருணாவும் அதுபோன்ற பத்திரமொன்றில் கையொப்பமிட்டே இயக்கத்தில் இணைந்தார். அவர் பிழைகள் விட்டமையால், அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது அவர் தப்பிச்சென்றார். இவ்வாறு கௌசல்யன் தெரிவித்தார்.

# கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் மாகாண மட்டத்தில் கண்காட்சி

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாண மட்டக்கண்காட்சியும், விற்பனையும் எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அம்பாறை மாவட்ட - அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் நடைபெறும். இந்தக் கண்காட்சியில், வடக்கு - கிழக்கு மகாணத்தின் 8 மாவட்டங்களிலுமுள்ள மாதர் அபிவிருத்தி நிலையங்களின் உற்பத்திப்பொருட்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

பொருளின் தரத்தையும், விற்பனை விலையும் நிர்ணயித்தல்- நுகர்வேரைக் கவரும் விதமாகவும் விற்பனைக்கு ஏற்பவும் பொருட்காட்சி அறையை ஒழுங்கு செய்தல் -

தயாரிக்கப்பட்ட பொருட்களின் பூரணத்துவம் - ஆகிய 3 விடயங்களின் திறமையானதெனத் தெரிவு செய்யப்படும் 3 மாவட்டங்கள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசினைப் பெற்றுக் கொள்ளும்.

அத்துடன், மாவட்டமொன்றுக்குத் தலா 3 பேர் வீதம் 24 பயிலுநர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும். கண்காட்சிக்குரிய பொருட்களுடன் கண்காட்சி ஒழுங்கை மேற்கொள்வதற்காக 08.08.2004 முற்பகல் 10 மணிக்கு இந்தப்பாடசாலைககுச் சமுகமளிக்குமாறு தையல் போதனாசிரியைகளையும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் கிராம அபிவிருத்தித்திணைக்களப் பணிப்பாளர் இ.இளங்கோவன் கேட்டுள்ளார். (24)

# தப்பியோடிய படையினருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படாது

சேவையில் இருந்து தப்பியோடிய படையினருக்கு எதிர்காலத்தில் பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாதென -படைத் தளபதி லெப ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார். எனினும், தப்பியோடிய படையினரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பாக ஆலோசிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சேவையில் இருந்து தப்பியோடி ஏற்கனவே, பொது மன்னிப்பு பெற்றுக்கொண்ட படையினர் மீண்டும் தப்பியோடியிருப்பதாகவும் தெரிவித்த இராணுவ அதிகாரி சாந்த கொட்டேகொட, தப்பியோடிய படையினரை கைது செய்யவதற்கான சிறப்பு தேடுதல் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாவும் தெரிவித்தார்.

# சவால்கள் சாத்தியமாக எழுச்சி கொள்ளும் குருநகர்

- அ.பி.ஜெயசேகரம்

கடலலைகள் கொஞ்சும் குருநகர் காவலர் தூய யாகப்பர் திருவிழா நேற்று கோலாகலமாக யாழ்.நகரில் கொண்டாடப்பட்டது. தமது வேர்களைத் தேடும் புலம்பெயர்ந்தவர்கள் தமது உறவுகளை உறுதிப்படுத்தும் இடம்பெயர்ந்தவர்கள் ஒன்றாக சந்திக்க தளம் அமைத்த விழா இது.

யாழ்.நகரின் கரையோரப்பகுதியில் அடர்த்தியான குடியிருப்புக்களைக் கொண்ட குருநகர் யாழ். குடாநாட்டின் அபிவிருத்திக்கு உடல் உழைப்பு, மூளை, கலை பண்பாட்டு வளங்களை வழங்கி வரும் நகருக்குள் ஒரு நகர். நவீன காலத்தில் பாரிய இயந்திரங்களைக் கொண்டு இயக்குபவைகளை குருநகர் தொழிலாளிகள் தமது உடல் உழைப்பினால் இயக்குமாற்றல் கொண்டவர். ஆழ்கடல் சுழியோடி இறந்த உடலங்களை தேடுவதென. முகிலைச சிராயும் உயர் கட்டடங்களில் வேலைகளென... சிலைகள் சொபங்கள், ஓவியங்கள் ஆழகிய, நுணுக்க வேலைப்பாடுகளென... மக்கள் குருநகரை தேடி வருவர். போரின் அனர்த்தங்களினால் பல துறைசார் மனிதர்களை இழந்தாலும், மிஞ்சிய எச்சசொச்சத்துடன் குருநகர் தனது தனித்துவ பாரம்பரியங்களுடன் நகர்கிறது.

மனிதனுக்குத்தேவையான புரதச்சத்தை மீன்பிடிப்பதன்மூலம் யாழ். குடாநாட்டிற்கும் குறிப்பாக யாழ். நகரவாசிகளுக்கு வழங்கும் குருநகரின் பௌதீக, தொழில், மனிதவளங்கள் பலப்படுத்தி பாதுகாக்கப்பட வேண்டியதின் தேவை உணர்த்தப்படவேண்டும். தமிழகத்தில் மீன் உணவின் நுகர்வு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு 4-7 கிராம்களாக காணப்பட. ஈழத்தமிழர்களுக்கு 18 தொடங்கி 22 கிலோகிறாம்களாக இருந்துள்ளது. உலகில் மீன் நுகர்வில் முன்னணியில் நிற்கும் யப்பானியர்களின் நுகர்வுக்கு இது இணையானதாகும் என்கிறது ஆய்வுகள். இதன் அறுவடைக்காக போர் சமாதான சூழலிலும் உயிரைப் பணயம் வைத்து இலங்கையின் படை பலத்தை ஊடுருவி குடாநாட்டுக்கு பசியாற்றக் கொடுக்கும் மீனவர்கள் வாழ்வு எமது அக்கறைக்கும் கவனத்துக்குமுரியது.

நெய்தல் நில மக்கள் பெரும் சனத்தொகை கொண்ட இடமாக விளங்கும் குருநகர் அனைதது நெயதல் மக்களுக்கு தோழமையும், நம்பிக்கையும்... அத்துடன் முன் உதாரணம் வேண்டாமா? கூட்டாகக் கொண்டாடி குதூகலிக்கும் இந்நன்நாளில் கூட்டாக வளர்ச்சியடைய ஒரு நிலைப்பாடு, பயணத்தில் ஒரு பார்வை, திட்டங்கள் செயற்பட ஒரு துணிவு, வாழ்வில் ஒரு திருப்புமுனை, சவால்களைச் சாத்தியமாக்க ஒரு பிழிவு தேவை. எந்தவொரு செயன்முறைக்கும் கொள்கை அவசியம். எந்தவொரு கொள்கையும் மேலோங்க செயன்முறை அவசியம்.

விதைக்காது அறுவடை செய்யும் கடற்தொழில் வாழ்வு முறையைத் தரையிலும் மீனவர்கள் பின்பற்றி வாழ முயல்வதால் அவர்கள் முன்னேற்றம் பல வழிகளில் தடைப்படுகிறது. அனைத்து வளர்ச்சிகளுக்கும் நெடிய பயிற்சி முறை தேவை. உடன்பலன் கொடுக்கும் ஒரு இயந்திரம் கடல். இதற்குப் பழக்கப்பட்டவர்கள் நெடிய பயிற்சிகளுக்கு தாக்குப்டிடிப்பது கடினமாகிறது. இதை அனைத்து துறைகளிலும் காணலாம்.

நெருக்கமான குடியிருப்புக்களைக் கொண்ட குருநகரின் ஆரோக்கிய வாழ்விற்கு வேறு இடங்களில் குடிபெயர்வு அவசியமாகின்றது. முன்னைய காலங்களில் இம்முயற்சிகள் தோல்வியடைந்தாலும் காலத்தின் தேவை உணர்ந்து வெளியிடங்கள் சென்று குடியேறும் பட்சத்தில் வீட்டுத் திட்டங்களை அமைக்க உதவி நிறுவனங்கள் முன்வருகின்றன. தொழிலிற்காக கரையோரங்களை அண்டி வாழவேண்டியதால், குடிசனப் பொருக்கை ஈடுகொடுக்க வீடுகளை அதிகரிக்கமுடியாத நிலங்கள் பற்றாக்குறை. ஆகையால் 2-3 மாடிக் கட்டட தனிவீடுகள் அமைக்கும் திட்டம் வீடு நெரிசல்களைக் குறைக்கும்.

1ஆம், 2ஆம் உலக யுத்தங்களில் ஐரோப்பியர் குறிப்பாக ஜேர்மனியர் தமது கணவர்களையும், வாலிப ஆண்களையும் இழந்தவர்கள். இந்த இழப்பு அந்தப்பெண்களுக்கு உத்வேகம் கொடுத்தது. தமது கணவர் இயக்கிய பாரஊர்தி பாரிய உழவு இயந்திரம் போன றவைகளை இயக்க உந்தப்பட்டார்கள். வாழ்வா? சாவா? என்ற நிலையில் பெண்ணிய மாயைகளை உடைத்தெறிந்தவர்கள். சமுதாய சமநிலை தோன்ற வெற்றியும் கண்டவர்கள். தமது கடலுழைப்பாளிகளை கடலில் இழந்த குடும்பங்கள் குருநகரில் அநேகம். மனவலிமையும், உடல் வலிமையும் பெற்று கடும் உழைப்பினால் பெண்கள் குடும்பம் நடத்துவது போராட்டம் எமக்கு விட்டுச் சென்ற பாடம். நெருக்குதல் காலங்களில் நாம் பெற்றவை வீண் இழப்புக்களல்ல. பெண்ணின் கண்ணீரை மூலதனமாக்கி அவளது வாழ்வுச்சிகலுக்கு விடைகாண எத்தணிக்காத இழுவைத் தொடர்கள். போர்க்காலம் பயிற்றிய விழுமியங்கள் எல்லாம் அடிப்பட்டுப் போக இவை வழி வகுக்கிறது.

காற்றுவாங்க செல்லும் கடற்கரை ஓரங்கள் கம்பிவேலிக்குள்ளும், எஞ்சிய பகுதிகளை உயர் வலயத்துள்ளும், வீடுகளை இராணுவ வலயத்துள்ளும் பறிகொடுத்து தெரு ஓரச்சந்திகளில் காற்றுவாங்க படையெடுக்கும் மனித கும்பல்கள். பல சமூக பிரச்சினைகளுக்கு வழி கோலும். பொழுதுபோக்கு மையங்கள் பரவலாக ஊக்குவிக்கப்பட வேண்டும் இருளை பழிப்பதைவிட விளக்குகள் ஏற்ற முயற்சி எடுப்பது நலம்.

உலக கிண்ணப் போட்டிகள் இளைஞர்களின் ஆர்வம், ஆரோக்கியம் மாற்றுச் சிந்தனைகளை மழுங்கடிக்கும் ஆயுதமாக மாறி வருகிறது. அரச ஊடகங்கள் இதற்கு துணைபோகிறது. குறிப்பாக முன்னைய ஆங்கில குடியேற்ற நாடுகளில் இடம்பெறும் துடுப்பெடுத்தாட்டங்கள், அதன் சின்னத்திரை நெடிய வர்ணனைகள் மனிதர்களின் வேலைநேரங்களை சூறையாடி வாலிப உலகத்தை வலுவிழக்கச் செய்கிறது. இவைகள் அனைத்தும் எமது கிராமங்களில் ஊடுருவியுள்ளது. பல இளைஞர்கள் விளையாடும் குருநகர் மைதானம் தற்பொழுது வெறிச்சோடி கிடக்கிறது. உடற்முயற்சியின்றி நோய்க்கு இரையாகும். இளைஞர் சமூகம். விளையாட்டுக்கு ஆட்களை தேடித்திரிய வேண்டிய அவலம். விளையாட்டுகள் ஆன்மீகம் ஊடுருவவேண்டும். விளையாட்டு கற்பிக்கும் உயர் இலட்சியங்களை தக்கவைக்க ஆன்மீக வேர் கருகிப்போனதால் பல விளைாட்டுப் போட்டிகளின் முடிவு உடல்வன்செயல். ஆடுகுழுக்களுக்கு தடைவிதிப்பு!

மனித வரலாற்றில் பெரும்பகுதி மத அடிப்படையிலான விழுமியங்களாலேயே ஆளப்பட்டுள்ளது. இந்த விழுமியங்கள் பண்பாட்டில் வேர் பிடிக்கும் பொழுது நிலைநிற்கும், புதிய தலைமுறையினருக்கு கடத்தி செல்லப்படும். சமயம். பண்பாடு நெருங்கிய தொடர்புடையது. சமயம் உயிரென்றால் பண்பாடு உடல்போல, கலையிலே ஒழுக்க முறையிலே சமூக அமைப்பிலே உருப்பெறாத சமயம் பயனற்றது. அது மனித வாழ்வைத் தொடாது. சமய கொள்கைகளும், உணர்வுகளும் மனிதனுடைய சொல். செயலிலுமே உண்மையாகின்றன. ஆலய பங்குக்குருவின் பிரசன்னம் நான்கு சுவருக்குள், வழிபாடுகள், சடங்குகளுக்குள் மட்டும் அடக்கிவைக்கப்படாமல் சமூகத்தில் பன்முக அலகிலும் பிரசன்னமாக வேண்டும். விழாக்களில் ஒரு நீண்ட வெள்ளை அங்கப்பிரசன்னத்தில் மட்டும் திருப்திகாணாமல் அடிமட்ட மக்களின் பிரச்சினைகளில் கலக்க சமூகம் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.



சுகாதாரம்...

# உணவுச் சுகாதாரம் தொடர்பான அறிவைப் பெறவேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்

(நேற்றைய தொடர்ச்சி)

அடுத்ததாக உணவுப் பாதுகாப்பானதாகவும் உகந்த முறையில் வழங்கப்படுவதற்கும் முறையான சட்டங்களும் அவசியம். அவைகள் தேவைக்கேற்றவாறு பயன்படுத்தப்பட வேண்டும். தற்சமயம் எமது நாட்டில் உணவுச்சுகாதாரத்தைப் பேணுவதற்காக 1980 ஆம் ஆண்டு 26ஆம் இலக்க உணவுச் சட்டம் மிகவும் வலுவுள்ளதாக அமைந்துள்ளது. இதன் அமுலாக்கம் அந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒபபடைக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி மன்றத் தலைவர் உணவு அதிகாரியாகவும், பிரதேச சபை அதிகாரி உணவு மருந்துப் பரிசோதகர், பொது சுகாதாரப் பரிசோதகர் உணவுப் பரிசோதகர் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சட்டத்தின் பிரகாரம் உணவு இறக்குமதி, உற்பத்தி, விநியோகம், களஞ்சியம், விற்பனை ஆகியவற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரக் கூடியதாக அமைந்துள்ளது.

இதைவிட உள்ளூராட்சி மன்ற உபவிதிகளும் உணவுச் சுகாதாரம் சம்பந்தமான சட்ட விதிகளைக் கொணடுள்ளது. இதை நடைமுறைப்படுத்தும் முழுப்பொப்பும் அந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**இந்தச் சட்டங்களின் முக்கியமான சில.**

1. சுகாதாரத்திற்கு ஊறுவிளை விக்கக் கூடிய அல்லது சுகாதாரக் கேடான இடத்தில் உணவு தயாரித்தல், களஞ்சியப்படுதல், விற்பனை செய்தல், விநியோகம் செய்தல் ஆகாது.

2. உணவு தூசி, இலையான் ஆகியவற்றால் அழுக்கடையாது பாதுகாப்பாக கண்ணாடிப் பெட்டியில் பாதுகாப்பாக மூடி வைத்தல் வேண்டும்.

3. உணவு தயாரிக்க, விநியோகிக்க பாவிக்கப்படும் பாத்திரங்கள் சுத்தமான நீரினால் கழுவி சுத்தப்படுத்தப்படல் வேண்டும். ஒருவர் பாவித்த உபகரணம் மற்றவர் பாவிக்க முன் கொதிநீரில் கழுவுதல் அவசியம்.

4. பழுதடைந்த, கலப்படம் செய்யப்பட்ட காலாவதியான உணவு விற்பனை செய்தல் ஆகாது.

5. உணவு கையாளுபவர்கள் சுகதேகியாகவும், துப்பரவாகவும் இருப்பதுடன் உணவைக்கையாளு முன்பும் மலகூடம் சென்று வந்த பின்பும் சவர்க்காரம் போட்டு கையை நன்றாக கழுவுதல் வேண்டும்.

6. இலையான் நோய்க்கிருமிகளை காவிச்செல்லும் ஆகையால் இவைகள் உற்பத்தியாகும் இடங்களான ஈரலிப்பான குப்பை, சமையல் கூடக் கழிவுகள், கிரமமாகவும், பாதுகாப்பாகவும் அகற்றி தூர இடத்திற்கு எடுத்துச் செல்லப்படவேண்டும்.

7. கடைகளுக்கு முன்பாகவும், வீதி ஓரமாகவும் உணவு தயாரித்தல் ஆகாது.

உணவுச் சுகாதாரம் பேணப்படாத நிலையில் தொற்று நோய்கள் கூடுதலாகப் பரவுவதையும் உணவு நஞ்சடைவதையும் பெருந்தொகையான உணவுப் பண்டங்கள் வீணாகப் போவதையும் அவதானிக்க முடிகின்றது.

உணவு கையாளும் நிலையங்களில் எமது பரிசோதனைகள், கீழ்க் குறிப்பிட்ட விடயங்களை கண்காணித்தல் சார்பாக அமைகின்றன.

1.இருப்பிடமும், சுற்றாடலும் - அசுத்தமற்ற நிலை, துர்நாற்றம், விலங்குகள், (நாய், பூனை, எலி, இலையான, கரப்பொத்தான், எறும்பு ஆகியன)

2. கட்டடம் - நலல நிலை, போதியளவு இடவசதி, வெளிச்சம், காற்றோட்டம் திருப்திகரமாகப் பேணப்படுகின்றது.

3. பதனிடும் அறை - பொதுவான துப்பரவு, சுவர் நிலம் சீலிங், கதவு, யன்னல், தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்பு, சீர்கெடும் நிலை.

4. உபகரணங்களும் தளபாடங்களும் - துப்பரவு, பராமரிப்பு, துருப்பிடியா நிலை.

5. உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்துதல் - தொற்றுக்கள் ஏற்படாமை (பூச்சி, புழு மொய்யாமை) அழுகக்கூடிய உணவு வகைகள், முறையாக குளிரூட்டல் காற்றோட்ட வசதிக்கான போதிய இடவசதி.

6. நீர் விநியோகம் - உற்பத்திஸ்தானம் திருப்தி, போதியளவு நீர், பாதுகாப்பான களஞ்சியம்.

7. கழிவுக் கட்டுப்பாடு - திண்மக் கழிவு சேகரிப்பு, களஞ்சியம், இறுதி அடக்கம், போதுமான மலசலகூட வசதிகள் (தொகையும், பராமரிப்பும்) திரவக் கழிவு - வடிகால் அமைப்பும் பராமரிப்பும்.

8. உணவு வகைகள் - தோற்றம், திறந்து வைக்கப்பட்டுள்ளதா, பழுதடைந்தவை, பொதி செய்தல், சுட்டுத்துண்டிடல் காலாவதியாகும் திகதி ஆகியன.

உணவு கையாளுபவர்களின் சுகநிலை - பற்சுகாதாரம் துப்பரவான உடைகள், தொப்பிகள், முகமறைப்பு ஆகியன வைத்திய பரிசோதனை செய்யப்பட்டதா?

9. உணவு கையாளுபவர்கள் சுகாதாரம் சம்பந்தமான பயிற்சி பெற்றவர்களா?

எனவே உணவு கையாளும் நிலையங்களில் உரிமையாளர்கள் மேற்குறிப்பிட்ட விதிகளை கடைப்பிடிப்பதன் மூலம் பொது மக்களுக்கு தரமான உணவை வழங்கி உதவுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த ஆண்டு உள்ளூராட்சி வார வெளியீடாக சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகினறேன்.

க.ஆ.ஜீவநாதன்

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, யாழ்.மாநகர சபையினரால் பல்வேறு பிரதேசங்களிலும் சிரமதானங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வகையில், கடந்த செவ்வாய்க்கிழமை நாவலர் வீதி முதல் ஆறுகால்மடம் சந்தி வரையான வீதியும், மாவீரர் சனசமூகத்தினருடன் இணைந்து அராலி வீதியும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

இன்று அரியாலை சித்துப்பாத்தி மைதானமும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

பெருவின் அந்தீஸ் மலைத்தொடரில்

# கடும்பனிக்குளிர் காரணமாக 46 சிறுவர்கள் உயிரிழப்பு



பெருவின் அந்தீஸ் மலைத் தொடரில் - கடும் குளிர் காரணமாக 46 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது கடந்த 30 வருடங்களில் முதன் முறையாக இடம்பெற்ற மிகப்பெரிய துயரச் சம்பவம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெருவிலுள்ள பல மாகாணங்களில் கடும் குளிர் காரணமாக ஒரு லட்சத்து 58 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, பெரு அரசாங்கம் அறிவித்து அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தக் கடும் குளிரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக, ஏழு லட்சத்து 45 ஆயிரம் டொலர்களை வழங்கவுள்ளதாக ஐ.நா.சபை அறிவித்துள்ளது.

இந்தக் காலநிலை தொடர்ந்து செல்லவுள்ளதாகவும், எனவே அந்தீஸ் மலைத் தொடரில் வாழும் வறுமைப்பட்ட மக்களுக்கு உதவிகளை அவசரமாக வழங்கவேண்டுமெனவும் தொண்டு நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்

அந்தீஸ் மலைத்தொடரில் வாழும் மிகவும் வறுமைப்பட்ட மக்களே இந்தக் குளிரால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்கள் தமது வாழ்விற்காக ஆடுகளை வளர்த்து விற்பதாகவும், தற்போது அந்த ஆடுகளும் குளிருக்குப் பலியாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கடும் மழை, பனி காரணமாக அந்தீஸ் மலைத்தொடருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு குளிருக்கேற்ற வகையில் உடைகள் வழங்க வேண்டுமெனவும், அந்த மக்கள் ஒருவகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறுவர் பாதுகாப்பு நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஈராக் பிரதமர் அலாவி லெபனானுக்கு விஜயம்

ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயன் அலாவி தமது இடைக்கால அரசுக்கான ஆதரவைப்பெறும் நோக்குடன் லெபனானுக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு சென்றுள்ள அலாவி, இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் தொழிற்துறையை மீள ஆரம்பித்தல் தொடர்பாகப் பேச்சுவார்த்தையை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

லெபனான் விஜயத்தை முடித்த பின்னர் பிரதமர் அலாவி - எகிப்து, ஜோர்தான், சவுதி மற்றும் குவைத் நாடுகளுக்கும் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஈராக்கை சுற்றியுள்ள அயல் நாடுகளுக்கு பிரதமர் செல்வதன் நோக்கம், சதாம் அரசிற்குப் பின்னர் ஈராக்குடனான அயல்நாடுகளின் உறவைக் கட்டியெழுப்பவெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்குடன் பொருளாதார உறவினை வைத்திருக்கும் மிக முக்கிய நாடு லெபனான் எனவும், எனவே வியாபார நடவடிக்கைகளை அந்த நாடு ஈராக்கில் தொடங்குவதற்கான வாய்ப்புக்களை மீள ஆரம்பிக்குமாறு பிரதமர் அலாவி தூண்டுவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம்



ஈராக் பிரதமர் அலாவி - ஜனாதிபதி பஸார் அல் அசாத் ஆகியோர் - சிரியாவிலிருந்து ஆயுததாரிகள் ஈராக்கிற்கு நுழைவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, சிரியாவுடன் உடனபாடொன்றுக்கு வந்துள்ளனர்.

ஈராக்கின் பாதுகாப்பிற்கு உதவுவதற்கு சிரியா மிகவும் ஆவலாக உள்ளதாக, அந்நாட்டு பிரதமர் மொகமட் நஜிஒட்றி தெரிவித்தார்.

முன்னைய காலங்களில் சிரியா பயங்கரவாதிகளுக்கு உதவி செய்ததாகவும், ஆனால் சதாம் தனது ஆட்சியின்போது பெருமளவான சிரிய பொதுமக்களைக் கொன்றதாகவும் அந்த நாட்டிற்கு பெருமளவு சேதங்களை விளைவித்ததாக குறிப்பிட்ட அலாவி, தற்போது இரு நாடுகளும் மிகவும் நெருக்கமாக உறவுகளை வலுவாக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஈராக்கிலிருந்து படைகளை

# அவுஸ்ரேலியா விலக்காவிட்டால் அந்நாடு மீது தாக்குதல் நடத்தப்படும்

## இஸ்லாமிய போராளிகள் எச்சரிக்கை

ஈராக்கிலுள்ள அவுஸ்ரேலியப் படைகள் அங்கிருந்து வெளியேற்றப்படாவிட்டால், அந்த நாட்டின்மீது தாக்குதல் நடத்தப்படும் என, இஸ்லாமியக் குழுவொன்று விடுத்த எச்சரிக்கையைத் தாம் கவனத்திலெடுக்கவுள்ளதாக, அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சான்டர் டௌன்னர் தெரிவித்தார்.

ஆனாலும், பயங்கரவாதிகளின் எச்சரிக்கைக்குத் தாம் அடிபணியப் போவதில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான அல் கொய்டா அமைப்பின் கிளையைச் சேர்ந்த இஸ்லாமிய தாவித் அமைப்பே மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளது. இந்த எச்சரிக்கை அவுஸ்ரேலிய மற்றும் இத்தாலி நாடுகளுக்கு இணையத் தளம் மூலம் விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளைப் போல ஈராக்கிலிருந்து அவுஸ்ரேலியா, இத்தாலி ஆகிய நாடுகள் தமது படைகளை வெளியேற்றவேண்டும் எனவும், இல்லையெனில் 2002 ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் இடம்பெற்ற தாக்குதல்கள் போல் நடத்தப்படும் எனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.


நிரஞ்சனாஸ் சங்கானை
எம்.ஜி.ஆர் இரு வேடங்களில், லதா, மஞ்சுளா மற்றும் நம்பியார் நடித்த
நினைத்ததை முடிப்பவன்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Random Hearts
(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த

காட்சிநேரம்:-10.30, 2.30 6.30, 9.3 (பு.நே)
மானஸ்தன்
(சி-2725)

நாகம்ஸ் சுன்னாகம்
சிம்பு, ரம்யா, கருணாஸ் மனோரமா நடித்த

குத்து
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


# மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

# பிரதி திட்டப் பணிப்பாளர் பதவி

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு சமுதாய் மீளமைப்பு அபிவிருத்தி திட்ட முகாமைத்துவப்படுத்தும் பிரிவில் உள்ள பிரதி திட்டப் பணிப்பாளருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பதாரர் 40 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். 55 வயதுக்கு குறைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். நியமனங்கள் திருப்திகரமான சேவையினடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய மூன்று வருட ஒப்பந்த அடிப்படையிலாகும். அவ்வொப்பந்தம் திருப்தியினடிப்படையில் மேலும் நீடிக்கப்படும். திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகளவு பயணம் செய்ய வேண்டும்.

## விண்ணப்பிக்கும் முறை:

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித் தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 10.08.2004 திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) இல. 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை. என்ற முகவரியில் கிடைக்க வேண்டும். அரச திணைக்களம்/அரச கூட்டுத்தாபனங்கள்/சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

## தெரிவு செய்யப்படும் முறை:

நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

## சம்பளம்:

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 26.12.2000 ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல.10 இன் 04 மற்றும் 05 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித்தீர்மானிக்கப்படலாம்.

## கடமைகளும் பொறுப்புக்களும்:

விசேடமாக இத்தற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப் பணிப்பாளருக்கு உதவ வேண்டும்.

- ❖ திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்ற மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.
- ❖ திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளை திறமையாக ஏற்பாடு செய்தல் மற்றும் விருத்தி செய்தல், திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- ❖ நடைமுறைப்படுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.
- ❖ திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி முகவரங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணிவர வேண்டும்.
- ❖ திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின்படி வழங்கல், ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கவேண்டும்.

## தேவையான தகைமையும் அனுபவமும்:

பொறியியல், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம், வியாபார நிர்வாகம்/முகாமைத்துவம், கணக்கியல் அல்லது வேறு ஏதாவது துறையில் பட்டமொன்றுடன் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரேஷ்ட முகாமைத்துவத் தரத்தில் 08 வருட அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

## அல்லது

குறிப்பிட்ட துறையில் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமை (கலைமாணி/டிப்ளோமா) அல்லது குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் கூட்டு அங்கத்துவத்துடன் வெளிநாட்டு நிதி முகவரங்களில் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் 05 வருடங்கள் உட்பட 08 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

## தொழில் சார் திறமைகள்.

- ❖ சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான திறமை.
- ❖ திட்டத்தின் நீண்டகால நீடித்த தன்மையை உறுதி செய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.
- ❖ பலதரப்பட்ட ஒழுக்காற்றுக் குழுக்களின் வேலைகளைத் திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்லும் திறமை.
- ❖ திட்ட நடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.
- ❖ திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.
- ❖ அரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.
- ❖ கணனி அறிவு பெற்றிருத்தல்.
- ❖ ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்கும் உயர் மட்டத் தேர்ச்சி இருத்தல்.

சி.ரங்கராசா,
பிரதம செயலாளர்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
உள்துறைமுக வீதி, திருகோணமலை.

(சி-2782)

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# அத்துருகிரிய சூட்டுச் சம்பவம்; படையினர் பலியாகவில்லை!

## இராணுவத் தலைமையகம் தெரிவிப்பு

கொட்டாவ - அத்துருகிரிய பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த எண்மரில், இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த எவரும் அடங்கவில்லை என்று இராணுவத் தலைமையகம் நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தகவல் வெளியிட்ட இராணுவத் தலைமையகம் -

கொல்லப்பட்டவர்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியும் அடங்குவதாக, இணையத் தளங்களில் கூறப்படுகின்றது. ஆனால், இது முற்றிலும் தவறானதாகும். இந்தச் சம்பவத்துடனோ, கொல்லப்பட்டவர்களுடனோ இராணுவப் புலனாய்வுப் பிரிவு எந்தத் தொடர்பையும் வைத்திருக்கவில்லையென்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா கருத்து வெளியிடுகையில் -

இந்தக் கொலைகளில் இராணுவம் தொடர்புபட்டிருக்கவில்லை. இந்தக் கொலைச் சம்பவம் வீட்டின் முதலாவது மாடியில் வைத்துத்தான் இடம்பெற்றுள்ளது.

வீட்டை உடைத்துக்கொண்டு உள்ளே யாரும் சென்றதாக அடையாளங்களோ, தடயங்களோ இல்லை. பிரதான வாயிலின் உட்கதவு, விறாந்தை திறக்கப்பட்ட நிலையிலிருந்ததுடன், கார் ஒன்றும் நிறுத்தப்பட்டிருந்தது. இவற்றைக் கொண்டு பார்க்கும்போது அவர்களுடன் தங்கியிருந்த நபர் ஒருவரே இக்கொலையைச் செய்துவிட்டுத் தப்பியிருக்கலாம் எனக் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் குறித்து - அந்தக் கட்டடத்துக்கு வந்த அந்தப் பகுதிப் படைப் பிரிவின் இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஆனந்த விமலவீர கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தக் கொலைக்கு 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி பாவிக்கப்பட்டிருக்கின்றது. இதனால்தான் அயலில் உள்ளவர்களுக்குப் பட்டாசுச் சத்தம் போலக் கேட்டது. இந்தக் கொலைகளில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரோ அல்லது இராணுவத்தினரோ சம்பந்தப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

# கூரான ஆயுதத்தால் வெட்டியே காசாளர் கொல்லப்பட்டார்!

## பிரேத பரிசோதனையில் தெரிய வருகிறது

(யாழ்பாணம்)

அராலிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மானிப்பாய் மக்கள் வங்கிக் கிளையின் காசாளர் சுந்தரம் பஞ்சலிங்கத்தின் சடலத்தை நேற்று மதியம் மல்லாகம் பதில் நீதிவான் வசந்தசேனன் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து மானிப்பாய் பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வந்து, பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய போது, கழுத்துப் பகுதியில் மூன்று இடங்களில் கூரான ஆயுதத்தினால் குத்தப்பட்டதன் காரணமாக சுவாசக் குழாய்க்குள் இரத்தம் சென்று வெடித்து அவர் உயிரிழந்திருக்கலாமெனவும்,

இவரது மரணம் இரண்டு தினங்களுக்கு முன்பு நடைபெற்றதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், கொலை செய்தவர்கள் இவரின் வாயை சிவப்புத் துணியினால் கட்டி இருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காசாளர், மக்கள் வங்கிக் கிளையிலிருந்து கடந்த வியாழனன்று மாலை 5.50 மணிக்குத் தனது வேலையை முடித்துவிட்டு, வீட்டிற்கு புறப்பட்ட சமயம் அவரது வீட்டில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

கொலைச சந்தேக நபர்கள் மானிப்பாய் மக்கள் வங்கியின் சாவிக் கொத்தினைக் கேட்டபோது, அவர் கொடுக்க மறுத்த சமயமே தாக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக, மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நேற்று மாலை வரை இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை என - மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமடைந்தவரின் உடல் பிரேதபரிசோதனையின் பின்னர் மனைவியிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டது. (தீ)

# அத்துருகிரிய சம்பவம் யுத்த நிறுத்த மீறலாம்!

## ஜே.வி.பி. கூறுகிறது

அத்துருகிரியவில் இடம்பெற்ற கொலைச் சம்பவம், விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த மீறல் என ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

அத்துருகிரியச் சூட்டுச் சம்பவம் குறித்து அந்தக் கட்சி நேற்று விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

விடுதலைப் புலிகளின் அத்துமீறும் செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. மிக முக்கியமாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இத்தகைய செயல்கள் அண்மைக் காலங்களில் இடம்பெற்றுவருகின்றன.

கொழும்பு உட்பட அதனை அண்டிய பிரதேசங்களின் பாதுகாப்புக்கு இது அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. தேசியப் பாதுகாப்பிற்கும், கொழும்புப் பகுதி பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாகவுள்ள புலிகளின் செயற்பாடுகள் குறித்து பொலிஸ் அதிகாரிகள் உடன் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

இல்லையேல் இது நாட்டிற்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்வும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கருணாவுடன் தொடர்பில்லை; அமெரிக்கத் தூதரகம் மறுப்பு!

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கருணாவிடம், தமது தூதரகத்தைச் சேர்ந்த எவருக்கோ அல்லது எந்தவொரு அமெரிக்க அரசாங்க அதிகாரிக்கோ எதுவித தொடர்பும் இல்லை என்று அமெரிக்கத் தூதரகம் நேற்று மாலை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று சண்டே லீடர் பத்திரிகையில் வெளியான கட்டுரைக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமெரிக்கத் தூதரகம் இந்த அறிக்கையை வெயிட்டுள்ளது.

கருணா - பயங்கரவாத எதிர்ப்புத் தொடர்பாக சிங்கப்பூரில் அமெரிக்க வெளிவிவகார திணைக்கள அதிகாரிகளுக்கு உரையாற்ற அங்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று கருணாவிடமுள்ள நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக சண்டே லீடர் பத்திரிகை கட்டுரை வெளியிட்டிருந்தது.

### சூட்டுக்...

உயிரிழந்தவர் தம்மிக என்ற மாத்தளையைச் சேர்ந்த சிங்களவர் என்பது உறுதியாகியிருக்கிறது.

இது தொடர்பாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா கருத்து வெளியிடுகையில்,

உயிரிழந்த தம்மிக இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்நதவர் அல்ல என்றும், சம்பவ இடத்தைப் பார்த்த பின்னரே இதனை உறுதிப்படுத்தியதாகவும் இராணுவத் தளபதி கூறியதாகத் தெரிவித்தார்.

இந்தக் கொலைகள் பற்றிய விசாரணைகள் நடத்தப்படுகிறது. இது பற்றிய தகவல்கள் உடனுக்குடன் எனக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. கொல்லப்பட்ட தம்மிக என்பவர் யார் என்பது குறித்து அடுத்த 24 மணித்தியாலத்துக்குள் அறிவிப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஹெல்கிசன்....

சனுடன் அந்த நாட்டு அதிகாரிகள் இருவரும் வந்துள்ளனர். இவர்களை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்ட் பிரட்ஸ்கர் வரவேற்றார்.

நான்கு நாள் விஜயமாக இலங்கை வந்துள்ள விதார் ஹெல்கிசன் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இதன்பின்னர் - ஹெல்கிசன் நாளை ஜனாதிபதியையும், பிரதமரையும் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதைவிட, இலங்கையில் நடைமுறையிலுள்ள போர்நிறுத்த உடன்பாட்டைப் பாதுகாக்கும் அடிப்படையிலேயே நோர்வேயின் தற்போதைய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

### சமாதான...

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்கள் குழப்பமடைய வாய்ப்பில்லை. சமாதான முயற்சிகளை இது பாதிக்காது.

இந்தச் சம்பவம் பற்றி தமிழ்நெற் இணையத்தளமே முதலில் செய்தி வெளியிட்டிருப்பதால், அதற்கு இந்தத் தகவலை வழங்கியவர் யார் என விசாரித்து அதனூடாக இச்சம்பவம் பற்றிய விபரங்களைப் பெற முடியும் என நமபுகிறேன் எனத் தெரிவித்தா.

### தமிழர்...

கல்வி நிறுவன வாயில்கள், யாழ் பல்கலைக்கழகம், சர்வதேச மாணவர் பேரவைஅலுவலகம் உட்பட பல்வேறு இடங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட நகரங்கள் மற்றும் கிராமப் புறங்களில் மக்கள் நடமாட்டம் அற்றிருந்ததுடன், வாகனப் போக்குவரத்துக்களும் குறைவாகவே இருந்தது.

நேற்று அனைத்து வழமையான செயற்பாடுகளையும் நிறுத்தி குடாநாட்டு மக்கள் கறுப்பு ஜூலை நினைவு தினத்தை துக்கதினமாக அனுஷ்டித்தனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் முழுமையான துக்க நாளாக அனுஷ்டிக்கபட்டது.

வவுனியா நகரிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டும், வர்த்தக நிலையங்கள் முழுமையாக மூடப்பட்டுமிருந்தன.

மன்னார் மாவட்டத்தில் முழுமையான துக்க நாளாக நேற்று கறுப்பு ஜூலை அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு - மண்டூர் நகரில் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. உணவகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக்கள் குறிப்பிட்ட அளவில் இடம்பெற்றன.

அம்பாறை மாவட்டத்திலும் கறுப்பு ஜூலை நாள் முழுமையான துக்க நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

## கடற்படைத் தளபதி பிரிட்டனுக்கு பயணம்!

(கொழும்பு)

சர்வதேச கடற்பிராந்திய நடவடிக்கைகள் தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்காக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நேற்றுமுன்தினம் இரவு பிரிட்டனுக்கு பயணமானார்.

செம்ரெம்பர் 11 - அமெரிக்காவில் நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து கடல் வலயப் பாதுகாப்புத் தொடர்பான அமெரிக்காவின் செயற்திட்டங்களின் ஒரு அங்கமாகவே கடற்படைத் தளபதி தயா சந்தகிரி பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவருடன் மேற்குப் பிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர, கடற்படை நடவடிக்கை இயக்குநர் றியர் அட்மிரல் விஜேயசேகரவும் பிரிட்டனுக்குச் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

# அத்துருகிரிய சம்பவம் யுத்த நிறுத்த மீறலா?

## கண்காணிப்புக்குழு விசாரணை

அத்துருகிரியவில் நேற்று இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலா என, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆராய்ந்து வருவதாக, அதன் ஊடகப் பேச்சாளர் டிசா கன்பொசா தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்று போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள், நிலைமையை நேரில் பார்த்துத் தெரிந்துகொண்டதுடன், அங்கு சில விசாரணைகளையும் நடத்தினர்.

எனினும், சம்பவம் தொடர்பான முழுமையான விபரங்கள் கிடைக்கும் வரை, இந்தச் சம்பவம் யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலா எனக் கூறிவிடமுடியாது. விசாரணைகள் முழுமையாக முடிந்த பின்னரே நாம் எதையும் கூறமுடியும். தற்போது கிடைத்திருக்கும் தகவல்களை வைத்துக் கொண்டு எம்மால் எதனையும் கூற முடியாதெனத் தெரிவித்தார்.

# கருணாவின் முக்கிய சகாக்கள் எண்மர்....

வெளியில் கேட்கவிலலை. 'யுஸி என...ப்படும் சத்தம் அதிகம் வெளிவராத 9 மி.மீ. துப்பாக். மூலமே இவர்கள் சுடப்பட்டதாகவும்-

இந்தத் துப்பாக்கிய இராணுவ விசேட படைப்பிரிவினரும் பயன்படுத்துவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றாதாகக் கருதப்படும் இந்தக் கொலைச் சம்பவம் குறித்த தகவல்கள் - பொலிஸாருக்கோ அல்லது வேறெவருக்கோ நேற்றுக் காலை வரை தெரியவரவில்லை.

நேற்றுக்காலை 7 மணியளவில் இராணுவத்தின் சமிக்ஞைப் பிரிவினரால் வானொலித் தொடர்பு ஒன்றை குறுக்கிட்டுக் கேட்டபோதே கொட்டாவ பகுதியில் கருணாவின் உதவியாளர்கள் எட்டுப்பேர் கொல்லப்பட்டதான தகவல் தெரியவந்தது.

இதேவேளை, இணையத்தளங்களிலும் கருணாவின் உதவியாளர்கள் கொல்லப்பட்... தகவல் வெளியான போதும் பொலிஸார் அதனை உறுதிப்படுத்தவில்லை.

இந்தநிலையில்தான் நேற்றுக் காலை அத்துருகிரிய பகுதியில் பொலிஸார் தேடுதலை ஆரம்பித்து - காலை 10.25 மணியளவில் சம்பவம் நடந்த வீட்டைக் கண்டுபிடித்தனர்.

வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார், அங்கு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் எட்டுச் சடலங்கள் கிடப்பதைக் கண்டுபிடித்தனர்.

நண்பகலுக்குப் பின்னரே பொலிஸார் இந்தச் சம்பவம் பற்றிய தகவலை உறுதிப்படுத்தினர்.

இதேவேளை சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற பொலிஸ், இராணுவ உயரதிகாரிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் ஆகியோர் விசாரணை நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் கருணாவின் நெருங்கிய சகாவும் அவரது தலைமைச் செயலராகக் கருதப்பட்டவருமான குகனேசன், கஸ்ரோ, கேசவன், ரூபன், ஆரப்பரன், விக்கி, விமலகாந்த் மற்றும் தம்மிக ஆகி யோர் அடங்குவதாகக் கூறப்படுகிறது.

எனினும் கொல்லப்பட்டவர்கள் பற்றிய விபரத்தை பொலிஸார் உறுதிசெய்யவில்லை.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களுடன் தங்கியிருந்த சகாக்கள் சிலரே இத்தாக்குதலை நடத்தியிருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் கிழக்கிலிருந்து நேற்றுமுன்தினமே அங்கு வந்து தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 ஆம் திகதி பொலநறுவை ஹிங்குராங்கொட விகாரையிலிருந்து கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்ட 14 பேரில் உயிரிழந்தவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் படைத்தரப்பு மற்றும் பொலிஸாரை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

இப்படியான இடத்தில் இத்தகையதொரு தாக்குதல் நடைபெறுமெனத் தாம் கருதவில்லை என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சம்பவம் நடந்த வீட்டின் முன்புறமாக - கருணா குழுவினர் பயன்படுத்திய 'சுப்பர் கஸ்ரம்' ரகத்தைச் சேர்ந்த புத்தம் புதிய கார் ஒன்றும் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த வீட்டை கல்கிசைப் பகுதியிலிருந்து சென்றதாகக் கூறப்படும் ஒருவர் தமது மகனின் திருமணத்துக்காக என்று கூறியே கடந்த மாதம் வாடகைக்குப் பெற்றிருந்தார்.

11 ஆயிரம் ரூபா மாத வாடகைக்குப் பெறப்பட்ட இந்த வீட்டுக்கு ஒரு வருட முற்பணமும் வழங்கப்பட்டிருக்கிறது. வீட்டு உரிமையாளர் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார்.

இதேவேளை, இந்த வீட்டில் சிலர் மட்டுமே தங்கியிருந்ததை தாம் அவதானித்ததாக அயலவர்கள் தெரிவித்தனர்.

மிகவும் ஆடம்பரமாகக் கட்டப்பட்டிருந்த இந்த வீட்டின் மூன்று பக்கங்களிலும் பற்றைகளும், கிறிஸ்ரல் மரங்களும் சூழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கருணா அணியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் அனைவரும் ஒன்றாக இருந்த சந்தர்ப்பத்தில் - மிகவும் திட்டமிட்ட முறையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

கருணாவுக்கு தாம் உதவி வழங்கவில்லை எனக்கூறிவந்த அரசாங்கத்துக்கு இந்தத் தாக்குதல் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.